உ

சுந்தரேஸ்வரர் துணை

சுவாநுபூதி

இஃது

திருநெல்வேலியைச்சார்ந்த

பத்தமடையென்னுங்கிராமத்தில்வஸிக்கும்

ஸ்ரீமத் - அப்பையதீக்ஷித

ஆசாரியரவர்களால்

செய்யப்பட்டு

இவர்களின்சிஷ்யராகிய

ஷை திருநெல்வேலியைச்சார்ந்த

கோபாலசமுத்திரத்தில்

வசிக்கும்

செல்லசாஸ்திரியாரால்

சென்னபட்டணம்

ஊ. புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரஅச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது

பிரமோதூத ஹு ஆடி மீ

Registered Copy-Right.

அறிவிப்பு

மகாசிறப்புப் பொருந்திய திருநெல்வேலித் தாம்ரபர்ணி தீரத்தில் கோபாலசமுத்திர மென்னும் கிராமத்தில் வசிக்கும் செல்லசாஸ்திரி என்னும் பெயரையுடைய என்னால் யாவருக்கும் விஞ்ஞாபனம் செய்யப்படுவது என்னவென்றால்,

பூர்வத்தில் வடவால விருக்ஷத்தின் அடியில் எழுந்தருளி சனகாதி நால்வருக்குத் தத்துவோபதேசஞ் செய்த தக்ஷிணாமூர்த்தியே உலகத்தில் உள்ள அஞ்ஞானத்தை நீக்கும்வண்ணம் மேலே சொல்லிய தீரத்தின்கண் இருக்கும்பத்தமடையென்னும் கிராமத்தில் உற்பவித்து வேதாகம புராண இதிஹாச சாஸ்திராதிகளை யுணர்ந்து ஞானவாசிட்டம் பகவத்கீதை சூதசம்ஹிதை பிரமசூத்திரங்களையும் ஈசோபநிஷத்து முதல் முக்திகோபநிஷத்து வரையிலுமுள்ள நூற்றெட்டு உபநிஷத்துகளையும் குருமுகமாகத் தெளிந்து அவைகளில் சொல்லிய சாதனங்களைக் கிரமமாக அநுஷ்டித்து எப்பொழுதும் உலகவியாபாரத்தை மறந்து சுவாநுபூதிநிஷ்டராய் எழுந்தருளிய ஸ்ரீமத்-அப்பையதீக்ஷிதாசாரிய ரவர்கள் சிஷ்யவர்க்கங்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்கிற கருணையினால் பிரமமீமாம்சாபாஷியம் அநுபூதிமீமாம்சாபாஷியம் முதலான லக்ஷங்கிரந்தங்களைச் சுத்தஞானசாஸ்திரத்தை அநுசரித்துப் பிரவர்த்திப்பித்த பின் அந்த கிரந்தங்களில் சொல்லிய ரகஸ்யார்த்தங்களைக் கீர்வாணபாஷையில் ஈடுபடாத அதிகாரிகளுக்காகத் திராவிடபாஷையில்ஜீவோத்பத்தி பிரகரணம் மகாவாக்கியப் பிரகரணம் ஸப்தபூமிப் பிரசரணம் சோடசாவஸ்தாப் பிரகரணம் ஜீவன்முக்திசாதனப் பிரகரணம் விதேக முக்திசாதனப் பிரகரணம் என்னும் ஆறையும் முறையேதெரிவிக்கின்ற சுவாநுபூதி என்னும் இந்த சாஸ்திரத்தை பிரவர்த்திப்பித்தார்.

இதை வாசித்துணர்பவர்கள் வேதாகமசாஸ்திர புராணு திகளாலுந் தெளியாத சந்தேகங்களைத்தெளிந்து ஆத்மஞா ன சூரியோதயத்தால் அஞ்ஞான இருளைப் பொக்குவார்கள். நூற்றெட்டு உபநிஷத்துக்களிலும் சொல்லும் ரகஸ்யார்த்தங் க ளெல்லாம் இதிற் சொல்லப்பட் டிருக்கின்றன. சாஸ்திரமெ ன்பதொன்றையும் அறியாதவர்களா யிருந்தாலும் இந்த இ ரந்தத்தில் பழகுவார்களானுல் அவர்கள் சகல வர்ணுசிரமிக ளுக்கும் உபதேசிக்கத்தக்க யோக்கிதையுள்ளவர்களாவர்கள். ஆதலால் இது லோகோபகாரார்த்தமாக என்னுல் அச்சிற்பதிக்கப்பட்டது.

சாற்றுகவி.

இவை

வைகைதீரத்தில் வேம்பத்தூருக்கு ஸமீபமான

புவனேகவீர பாண்டியபுரம்

ஸுப்ரமண்யபாரதியாரால்

இயற்றப்பட்டன.

தருவளரும்தாம்ரபர்ணிதீரத்தில்
பத்தமடைதன்னிற்றோன்று
குருபரனப்பயதீக்ஷிதப்பிரபல
விப்பிரகுலதிலகக்கொண்மூ
மருவுமறுப்ரகரணமாய்வளர்ஸ்வானு
பூதியெனுமாரிதூற்றிக்
கருவிலுழலிப்பிரபஞ்சகனலறச்சி
வப்பயிரைக்காத்ததாமால்.

———

பத்தமடையப்பயக்கொள்ளாமலிக்கணமனமேபற்றுமுத்தா
பத்தமடையப்பயல்சேர்பவன்பங்கமெனநீக்குபரமமாரு
பத்தமடையப்பயப்பால்கொள்குருகாயிகத்திலனுபவித்துத்தங்
பத்தமடையப்பயதீக்ஷிதர்ஸ்வானுபூதியிதுபரிவின்மாதோ [தார்

(இ-ள்.) பத்தம் - விசுவாசம், அடைய - பொருந்த, பயக் கொள்ளாமல் - மெள்ளகிரகியாமல், இக்கணம் - இந்தக்ஷண மே, மனமே - என் இருதயமே; பற்று - மனனம்பண்ணு, மு த்தாபத்து-தாபத்திரையத்து; அமடை-துன்பத்தை, அப்பு அய ல் சேர்பவன் - ஜல சமீபத்தை யடைபவன், பங்கமென்-சேற் றை நீக்குவதுபோல், நீக்கு-நிவர்த்திபண்ணிக்கொள்ளு; பரம்

மாரூபத்து - பிரமமகாஸாக்ஷாத்கார ஸ்வரூபத்து, அம் - லக்ஷணம், அடைய - முமுக்ஷ, பயப்பால் - ஜலஸம்பந்தக்ஷீரம், கொள் - புஜிக்கும், குருகாய் - ஹம்ஸம்போல, இகத்தில் - இந்தப்பிரபஞ்சத்தில், அனுபவித்து - அனுபோகஞ்செய்து, தந்தார் - லொகோபகாரமாகக்கொடுத்தார்; பத்தமடை-பத்தமடையென்னும்கிராமத்தில், அப்பயதீக்ஷிதர்-அப்பையதிக்ஷிதர் என்னும்நாமகரணத்தையுடைய ஸத்குருமூர்த்தியானவர், ஸ்வானுபூதி - ஸ்வயமாக அனுபவித்தபடியேசெய்த, இது - இந்தத்திவ்வியஞானசாஸ்திரத்தை, பரிவின்-பிரியமாக, மாதோ - அசைச்சொல்.

கருத்துரை.

பத்தமடைஎன்னும் கிராமத்தில் எழுந்தருளிய அப்பையதிக்ஷிதர் என்னும் ஸத்குருமூர்த்தியானவர் அனுக்கிரகம்செய்த ஸ்வானுபூதி என்னும் இந்தத்திவ்விய ஞானசாஸ்த்ரத்தை என் இருதயமே சீக்கிரத்தில் விசுவாஸத்தோடு கூடமனனம்பண்ணி தாபத்திரையத்தைப் போக்கடித்துக் வகைல்லிய ஸாக்ஷாத்காரத்தைபடைவா யென்பதாம்.

உ

சுந்தரேசர் துணை.

சுவாநுபூதி.

முதலாவது
ஜீவோற்பத்திபிரகரணம்

ஈசாவாஸ்யம் முதலான சகல உபநிஷதர்த்தங்களை நன்றாய் அறிந்தவராயும், சாஸ்த்ரங்களில் சொல்லிய குருலக்ஷணம் பொருந்தினவராயும், மகா தயாளுவாயும், இருக்கின்ற சத்குரு சுந்தரேசுவர தாதபாதர் அவர்களுடைய கிருபையினால் ப்ரம்ம மீமாம்ஸா பாஷ்யம், அநுபூதி மீமாம்சா பாஷ்யம் முதலான கிரந்தங்களில் சகல வேதாந்தார்த்தங்களையும் முமுட்சுக்களுக்கு உபகாரமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் துலக்கமாகக் காண்பித்திருந்தபோதிலும் நித்தியா நித்தியவிவேகம் முதலான சாதன சதுஷ்டயம் பொருந்திய கீர்வாண சாஸ்த்ரம் தெரியாத அதிகாரிகளுக்கு வேண்டித் திராவிட பாஷையிலே அந்தப் பாஷ்யங்களில் சொல்லிய அர்த்தத்தைச் சுருக்கமாய் இதிற்காண்பிக்கிறோம்.

எப்படியெனில், இந்த ஜனன மரண ப்ரவாகமாகிய சம்சாரதுக்கம் தீரவேண்டிய நிமித்தியம் பிரமஞானத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்று பூர்வ சாஸ்த்ரங்களினாலே யாவருக்கும் தெரிந்திருக்கின்றது. ஆனால் அந்தப் ப்ரம்மம் இவ்விதமென்று லக்ஷணத்தோடு கூடப் பூர்விகாளாலே சித்தாந்தப்படாமையினால் அந்த நிர்ணயம் ஒருவருக்கும் வர இ—மில்லாமல் இருக்கின்றது.

சங்கை—வாக்குக்கும், மனசுக்கும், எட்டாத ப்ரம்மத்தை எப்படி லக்ஷணத்தோடுகூடச் சொல்லலாம். யாதாயினும் ஒருலக்ஷணத்தை அதற்குச் சொன்னால் கடபடாதிகளைப்போலத் திருசியமாகும். திருசியமானால்மித்தையாகுமே. ஆகையினாலேதான் லக்ஷணத்தோடுகூட ஒருவராலேயும் நிருபிக்கப்படவில்லை.

உத்தரம்—உள்ளது; வாக்குக்கும், மனசுக்குமெட்டாதப்ரம்மமே சுருதியாலும் சித்தாந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், அது ஜீவன்முக்தாளுடைய பிராரப்தம் க்ஷயிச்சபின் சேஷிக்கத் தக்கதாகையால் இப்போது ஜீவன்முக்தி யடையவேண்டிய அதிகாரிகளுக்கு அந்தப் ப்ரம்மமே சத்தியமென்று சொல்வது எவ்வளவும் நியாயமில்லை. லக்ஷணமற்ற அந்தப் ப்ரம்மத்தைத்தானே உபதேசித்தால், அந்தக் குரு சிஷியாள் இந்த உலகத்தை வஞ்சித்துத் தாங்களும் எதேச்சையாகவே சஞ்சரிப்பார்கள். எந்தப் ப்ரம்மத்தைத் தானறிந்து சிஷியனுக்கு உபதேசித்தால் அவ்விருவர்களும், உலகமும் கிருதார்த்தமாகுமோ அந்தப் ப்ரம்மம் எதுவென்றால் சொல்லுகின்றோம். அது சச்சிதானந்த லட்சணமாயும், ஜீவனுக்குக் காரணமாயும், ஜகத்காரணமான ஈஸ்வரனுக்குக் காரணமாயும், வாக்குக்கும் மனசுக்கும் எட்டத் தக்கதாயும், சுருதிகளில் சொல்லப்படுகின்றது. அந்தப்பிர்மம் சப்ரதியோகிகமென்றும், நிர்க்குணமென்றும், சொல்லப்படும். முன்சொல்லிய ப்ரம்மம் நிஷ்ப்ரதியோகிகமென்றும், நிர்க்குணாதீதமென்றுஞ் சொல்லப்படும். இப்படிப்பட்ட இரண்டு பிரம்மங்களைப் பூர்வீகாள் சொன்னபோதிலும் பகுத்துச் சொல்லாமல் ஏகமாக நிருபித்திருக்கிறார்கள். இதில் ஜகத், ஜீவன், ஈசன், நிர்க்குணபிர்மம், அதீதம் என்றுஐந்து விதமான தத்துவங்கள் பிரசித்தமாகச் சாஸ்திரங்களில்சொல்லப்பட்டிருக்கின்றன. ஜகத்தாவது ஏதென்றால் பஞ்சீகிருத ஸ்தூலப்ரபஞ்சம்; ஜீவனாவது ஏதென்றால் அபஞ்சீகிருதபஞ்சமகாபூதகாரியங்களான பிராண, மனோ, புத்தி இந்திரியங்களில் ஆத்துமா அத்தியாஸத்தையடைந்து கர்த்தி

ருத்துவ, போக்திருத்துவாதி சம்சார துக்கானுபவமுள்ள பிராணிகள்; ஈசனாவதேதென்றால் சுத்தசத்துவப் பிரதானியாயுள்ள மாயா பிரதிபிம்பமான ஸகுணமூர்த்தி; மற்றப் பிரமங்களையோ பிரித்துச் சொன்னோம். பின்னும் ப்ர்ம்ம விஷ்ணு ருத்திராளென்று ஈஸ்வரனை மூன்று விதமாகப் பிரித்திருக்கிறதுபோல விசுவன், தைஜஸன், பிராஞ்ஞனென்று ஜீவனையும் மூன்றாகச் சாஸ்திரங்கள் பிரித்திருக்கின்றன. இந்த அத்தியாத்ம சாஸ்திராதிகாரியினாலே ஜகத்தும், ஜகத்காரணமான ஸகுணேசுவரனும், மிகவும் உபேட்சிக்கப் பட்டிருப்பதினால் அந்த ஆதிபௌதிக, ஆதிதெய்விக, காரிய காரணங்களை நிரூபிக்க அவசியமில்லை. தன்சம்சார துக்கம் தீரவேண்டிய நிமித்தம் தன்னுடைய ஸ்வரூபம் மாத்திரம் நன்றாகத் தெரியவேண்டுவதால் இந்த அத்தியாத்ம பிரபஞ்ச காரிய காரணங்களை நன்றாக நிரூபிக்கிறோம்.

இந்த ஜாக்கிரத்தின் ஸ்தூல தேகாபிமானியான விசுவன், ஸொப்பனசூட்சும தேகாபிமானியான தைஜஸன், ஸுஷுப்தி காரணதேகாபிமானியான பிராஞ்ஞன் இந்த மூவகையான ஜீவர்களுக்கு அப்புறப்பட்ட துரியனென்ற பிரத்தியகாத்மா காரணமாவன். அவனை அபேட்சித்துப் பரமாத்துமா பரமகாரணமாவன். பரமகாரணாதீதனையோ நிரூபிக்கத்தக்கதில்லை. பிரத்தியகாத்துமா, பரமாத்துமாக்களுக்குப் பேதமென்னவென்றால் கடாகாசத்துக்கும், மகாகாசத்துக்கும், உள்ளபேதம்போலப் பரிச்சேதாபரிச் சேதங்களினாலே பேதம். இந்தப் பிரத்யகாத்துமாவான காரியத்துக்கு உபாதானகாரணமும், நிமித்தகாரணமும், சச்சிதானந்த ஸ்வரூபியான பரமாத்துமா ஒருவனே இருந்தபோதிலும், பிராஞ்ஞன ஜீவனுக்கு உபாதானம் பிரகிருதியும், நிமித்தம் பிரத்தியகாத்துமாவுமென்று இப்படிப் பின்ன நிமித்தோபாதான காரணவாதம்கூடும். ஆகாசம் முதலான பூத பௌதிக ஜகத்துக்கு உற்பத்தி கேள்வியாகிறதே தவிர ஜீவத்திரையத்துக்கு உற்பத்தி கேட்கவில்லையென்று சில பூர்விக வேதாந்திகள் சொல்லுகிறார்கள். அதுகூடாது: ஏனென்றால் அக்கினியிடத்

தினின்று கணம்போல் உற்பத்தியான பிரத்தியகாத்மாவாகிய ஜீவஸாட்சிக்கே சுருதியால் சொல்லப்பட்டிருக்க ஜீவனுக்கு உற்பத்திவிஷயத்தில் என்ன சந்தேகமிருக்கிறது.

சங்கை—அவித்தை புத்தி முதலான உபாதியை அபேட்சித்து ஜீவோற்பத்தி உபசாரமாகச் சொல்லப்படுகிறதே தவிரப் பரமார்த்தமாக அவனுக்கு உற்பத்தி கூடாது; அப்படி உற்பத்தியை அவனுக்கு ஒப்புக்கொண்டால் நாசம் வரும். அப்போது நீயேபிரமமென்ற அபேதோபதேசம் வீணாகும். ஆகையால் ஜீவனுக்கு உற்பத்தியை ஒப்புக்கொள்ளக் கூடாதென்பதற்கு.

உத்தரம்—அவனுக்கு உற்பத்தியை ஒப்பாத பட்சத்தில் நாசமுமில்லை. அப்போது ஜீவன்முக்தியும், அத்துவைதசித்தியும்வரமாட்டா. அபேதோபதேசமும், நிர்க்குணபிரமத்துக்கும், பிரத்தியகாத்துமாவுக்குமே தவிர ஜீவப்பிரமங்களுக்குக் கூடாது. நீருக்கும் எண்ணெய்க்கும் சேர்க்கையில்லாததுபோல் சச்சிதானந்த குணத்துக்கும் கர்த்திருத்துவாதி குணத்துக்கும், சேர்க்கையில்லாததினால் குடத்துநீரும் குளத்துநீரும் ஒன்றாய்ச்சேருவது போலப் பிரத்தியக் பிரமங்களுக்குச் சேர்க்கைகூடும். ஆகையால், ஜீவப் பிரமங்களுக்குப் பேதம்கூடாதென்றது எல்லோருக்கும்சம்மதம்தான். எதில் எது உண்டாயிற்றோ அதில் அதற்கு லயம் என்ற நியாயம்போல அவித்தையிலுண்டான ஜீவனுக்கு அவித்தையில் லயமும், வித்தியா ஸ்வரூபமான பரப்பிரமத்திலுண்டான பிரத்தியகாத்துமாவுக்கு நிதித்தியாசனத்தினால் பரப்பிரமத்தினிடத்தில் லயமும் கூடும். இப்படி அன்றி உபாதியை அபேட்சித்து ஜீவப் பிரத்தியகாத்துமாக்களுக்கு உற்பத்தி உபசரிக்கப்படுமாகில், சுருதி, யுக்தி அனுபவங்களுக்கு விரோதம்வரும். அவித்தியா காரியங்களான புத்தியாதிகளுக்குக் கர்த்திருத்துவமும், ஜீவனுக்கு ஜடத்துவமும்வரும். புத்திக்கே சுபாவமாக ஜடத்துவம் பிரசித்தம். அதினுடைய அதீனமான ஜீவன் அந்தப் புத்தியைக் காட்டிலும் நிரம்பவும் ஜடனாக வேண்டும். அப்போது கர்த்திருத்துவம் அவனுக்குச் சித்தியாது.

அசேதனமான கடாதிகளுக்குப் பிரவிர்த்திகாணுமே. ஆகையினாலே உபாதிகளுக்கும், உபாதியுடையவர்களுக்கும், உற்பத்தி சொல்லித்திரும். ஜீவனுடைய உபாதானகாரணத்தை அபேட்சித்து அசேதனத்துவம் கண்டபோதிலும் நிமித்தகாரணத்தை அபேட்சித்துச் சேதனத்துவம் காண்கிறபடியால் நிமித்தாபேட்சையால் ஜீவனுக்கு உற்பத்தியும், உபாதானுபேட்சையால் உபாதிக்கு உற்பத்தியும் கூடும். பின்னும் சுவேதாசுவதரமென்ற உபநிஷத்தின் ஆரம்பத்தில் பிரமவாதிகள் சொல்லுகிறார்கள். எப்படி எனில், என்ன காரணம் பிர்மம். நாம் எதில் நின்று உண்டாயிருந்து லயிக்கிறோமென்ற இதில் ஆத்ம உற்பத்தியாதிகளைச் சிந்தித்திருப்பதால், ஜகத்துக்கு மாத்திரம் உற்பத்தியுண்டே தவிர ஜீவனுக்கில்லையென்று சொல்ல இடமில்லை. ஸ்தூலதேக புத்தியினாலே சொன்னார்களென்று சொல்லவும் இடமில்லை. ஏனென்றால் ஸ்தூலதேக காரணமான மாதா பிதாக்களையாவது சகுணேசுவரனையாவது காரணமாக அறியாமல் நிர்க்குணப் பிரமமே நமக்குக்காரணமென்று தியான யோகத்தால் அறிந்தார்களென்று மேலேசொல்லி யிருப்பதால், சிற்சக்தி விசிஷ்டமான நிர்க்குண ஸப்பிரதியோகிக பிரமமே ஜீவோற்பத்தி யாதி காரணமென்று தீர்மானிக்க லாயிற்று. பின்னும் வேதாந்தசூத்திர கர்த்தாவாகிய வியாஸாசாரியரும் பிரம வித்தினுடைய பிராரப்தக்ஷயகாலத்தில் வாக்கு மனதில்லயித்து, மனசு பிராணனிடத்தில் லயித்துப், பிராணனும் உபப்பிராணன்களுடன் கூடத் தேகாதிகளுக்கு அத்தியட்சனாகிய ஜீவனிடத்தில் லயித்து, ஜீவனும் பூதங்களில் லயித்து, அவைகளும் நிர்க்குணப் பிரமமான தேஜஸ்களில் லயித்து, அவைகளும் நிர்க்குணதீதபிரமமான பரதேவதையினிடத்தில் லயிக்கின்றனவென்று சொல்லி யிருப்பதால் கீழே சொல்லியபடி ஜீவனுக்கு உற்பத்திவிஷயத்தில் இரண்டுவித பரப்பிர்ம பேத விஷயத்திலும் எள்ளளவும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

சங்கை — ஆகாசம்-வாயு-தேஜஸ்-அப்பு-பிருதிவி-ஓஷதி-அன்னம் - புருஷன் என்ற இந்த எட்டும் கிரமமாயுண்டான

திரகச் சுருதியை அநுசரித்துச்சொல்லிய வியாஸாசாரியாரும் ஜீவனுக்கு உற்பத்தி கூடாதென்று துலக்கமாய்ச் சொல்லியிருக்கிறரோ அவர் ஸர்வஞ்ஞராகையால் பூர்வோத்தர விரோத வாதியென்று சொல்லக்கூடாதே.

உத்தரம்—பாகவதமத நிராசன காலத்தில் ஜீவனுக்கு உற்பத்தி கூடாதென்று சொல்லி யிருக்கிறார். உள்ளதுதான். அதினல் குற்றமில்லை. ஏனென்றால் சகுணவாசுதேவரிடத்தினின்றும் ஜீவனுக்கு உற்பத்தி யென்று பாகவதாள் சொன்னபடியால் அப்படிக் கூடாதென்று சொன்னது நியாயந்தானே. யாதொரு காரணத்தால் நிர்க்குணப் பிரமத்தி னிடத்தில் ஜீவனுக்கு உற்பத்தி யென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதோ. பின்னும் வாயுமுதலான விகாரங்களுக்கு விகாரத்தினிடத்தில் உற்பத்தி கண்டதுபோல விகாரியான ஜீவனுக்கு விகாரியான ஈசுவரனிடத்தினின்று உற்பத்தி கூடுமென்ற சங்கை தீரவேண்டிய நிமித்தம் சொன்னதாக எண்ணத்தக்கது.

முதலாவது ஜீவோற்பத்திப்பிரகரணம்

முற்றிற்று.

மஹா வாக்கியப் பிரகரணம்.

இப்போது தத்துவமஸியென்ற மகாவாக்கியத்தின் அர்த்தத்தை வியக்தமாகச் சொல்லுகிறோம். தேவதத்ததிருஷ்டாந்தத்தினல் தத்பதத்தில் கர்பிக்கப்பட்ட வாச்சியார்த்தமான ஈசத்திரயத்தை மித்தை என்ற நிச்சய புத்தியினல் கழித்திருந்த சிஷியனுக்கு அந்த ஞானம் திடமாகும்பொருட்டுக் குருவால் திரும்பவும் அநுவதிக்கப்பட்டு லக்ஷியார்த்தமான நிர்க்குணசச்சிதானந்த அகண்ட ப்ரம்மமே தத்பதத்தினல் உபதேசிக்கப்படுகிறது. துவம் பதத்தில் அடையப்பட்டிருக்கின்ற வாச்சியார்த்தமான ஜீவத்திரயத்தைச் சிரவண, மனனநிதித்தியாஸனங்களினலே கழிக்க வேண்டிய நிமித்தமாக

லட்சியார்த்தமான நிர்க்குணசச்சிதானந்தாம்ச ப்ரத்தியகாத்மாவானவன் துவம்பதத்தினால் உபதேசிக்கப்படுகிறான். அஸிபதத்தில்அடையப் பட்டிருக்கின்ற வாச்சியார்த்தமான பிரத்தியக் பிரமங்களைச் சமாதியினாலே கழித்து லட்சியார்த்தமான பராமாத்தும ஸ்வரூபம் மாத்திரம் அஸிபதத்தினால் உபதேசிக்கப்படுகிறது. இந்த அஸிபதார்த்தாநுபூதி காலத்தில் பிரத்தியகபிர்ம்மங்களுக்கு ஐக்கியமுண்டாகிறது. இந்த அஸிபதார்த்தமான பராமாத்மாவே பூர்வம் நிஷ்ப்ரதியோகிக ஸ்வரூபமாயிருந்தாலும் விளையாட்டாகவே சச்சிதானந்த ஸப்ரதியோகிக ஸ்வரூபியாய்த் தானாகவே பவித்து ஜீவேசுவரர்களைச் சிருஷ்டிக்க வேண்டு நிமித்தமாகப் ப்ரத்தியக்ப்ரம்ம ஸ்வரூபங்களை அடைந்து சம்சார ஜகத்காரிய நிர்வாகிகளா யிருக்கிற ஜீவேசர்களுடைய அந்தரியாமிகளாகச் சொல்லப்படுகின்றான். தேகாந்தர்யாமி ஜீவன். ஜீவாந்தரியாமி ப்ரத்தியகாத்மா. பிரத்தியகாத்மாஅந்தரியாமி பரமாத்துமா. இந்தப் பரமாத்துமாவே கைவல்யமோட்ச ஸ்வரூபி.மோட்சாதீத நிஷ்பிரதியோகிகன் வாக்குக்கும், மனசுக்கும் எட்டாதவன். ஜீவன்முக்தனுக்குப் ப்ராரப்தம் நசித்தபின் பவிக்கப் போகிறானென்று சொன்னோமே, இந்த அகண்டைக ரஸஸ்வரூபமாயும், மகாகாசம்போலப் பரிபூர்ணமாயும் ஸ்வகதபேதத்துடன் கூடியும் நித்திய பரஞ்சோதியாய் விளங்குகிற ஸப்ரதியோகிகப் ப்ரம்மத்துக்கு அப்புறப்பட்ட நிஷ்ப்ரதி யோகிகப்பிரமத்தை அடிக்கடி புகழ்ந்து சொல்வதினால் முமுட்சுவுக்கு எவ்வளவும்பிரயோஜன மில்லாதபடியால் சத்தென்றும் சித்தென்றும் ஆனந்த மென்றும் இவ்வித ஸ்வகத பேதமுள்ள அஸி பதார்த்தமான ஸப்பிரதியோகிக பராமாத்மாவைத்தானே நிரம்பவும்புகழலாயிற்று,

தத்துவமஸி என்ற வாக்கியத்தக்கு அதுபோல நீயிருக்கிறு யென்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் அதனுடையவன் நீயென்றும், பின்னும் சிலர் அதின் ஸமீபத்தில் நீயென்றும், பின்னும் சிலர் அதாக நீ முன்னேயென்றும், பி

ன்றும் சிலர் அதுஆக நீ ஆகப்போகிறா யென்றும், பின்னுஞ் சிலர் அதாக நீ இப்போது ஆகிறாயென்றும், இவ்விதமான பட்சங்கள் வேதாந்திகளாற் சொல்லப்படுகின்றன. இதில் முன்சொல்லிய மூன்று பட்சங்களும் சகுணமுக்தி விஷயமாகையினால் உபேட்சிக்கத்தக்கதா யிருந்த போதிலும் பின் சொல்லிய மூன்று பட்சத்தில் ஜீவோற்பத்திக்கு முந்திய காலத்தை அபேட்சித்துச் சொல்வதினால் உற்பன்ன ஜீவனுக்கு உபகாரமில்லாததினால் உபயோகம் அற்றபோதிலும், மற்ற இரண்டு பட்சங்களும யுக்தமானதாயிருக்கிறது. அதில் ஒருபட்சத்தைப் பூர்வமாகவும், மற்றொன்றைச் சித்தாந்தமாகவும், நிர்ணயிக்க வேண்டியதில் சிலர் அஸியென்ற பதம் வர்த்தமானார்த்தத்தில்·தானே ஸாட்சாத்தாகப் ப்ரவர்த்திக்கிறபடியினாலே இப்போதே நீயந்தப் ப்ரம்மமாகிறா யென்று முடிவாகச் சொல்லுகிறார்கள்.

அதுகூடாதென்று நாம்சொல்லுகிறோம். ஏனென்றால், குருவினுபதேசத்துக்குமுந்தியே யிந்த ஜீவன் ப்ரம்மமாக இருப்பதே யானால் உபதேசம் உபயோகமற்றதாகுமே. உத்தமாதிகாரியா யிருந்த போதிலும் உபதேசித்த இரண்டாவது க்ஷணத்தில் மனனமும், மூன்றாவது க்ஷணத்தில் நிதித்தியாஸனமும், சிஷியனால் செய்யப்படாமல் அபரோக்ஷ ஸம்யக் தரிசனம் சித்திக்கமாட்டாதே. ஆகையினாலே அஸிபதம் வர்த்தமானார்த்தத்தி லிருந்த போதிலும் பவிஷியதர்த்தத்தில்தான் நிரூபிக்க வேண்டும். ஆனால் சுருதி வர்த்தமான மாகச் சொல்ல வேண்டிய தேதெனில், காட்டாறுகடந்து கரையினடியில் கையசைந்துவரும்இஷ்டனைக் கரையிலுள்ளவன் கரையில் வந்தாயிற்று பயம்வேண்டாமென்று சொல்வதுபோல நியாயமானதால் குற்றமில்லை. இந்த அர்த்தத்தை ஔடுலோமி என்ற ஆசாரியர் சொல்லி யிருக்கிறார். உபதேசத்துக்குமுன் பராபராத்மாக்களுக்குப் பேதமும், உபதேசத்துப்பிந்திய மனன நிதித்தியாஸனத்தினாலுண்டான அபரோட்சாநுபவமான பின்னபேதமும் கூடும். இதில் சில குயுத்திகள்செய்வார்கள். எப்படி என்றால் முன்பேத மிருந்தா

ல் பின் அபேதம் வரமாட்டாது. பழுதையில் முக்காலத்திலும் சர்ப்பத்தைக் காணோமே. ஜீவனால் தனக்கு முன்னில்லாத பிர்ம ஸ்வரூபம் அடையப் படுமேயாகில் சுவர்க்கபலம்போல் மோட்சமும் நசுவரமாகும். ஆகையால், காலத்திரயத்திலும் பராபரங்களுக்கு அபேதமே சத்தியமென்ற இதில் நாம் சொல்லுகிறோம். முன் பேதமில்லாவிட்டால் பின்உபதேசம் வரஇடமில்லையே. முக்காலத்திலும் அபேதமே சத்யமாகில், குருசிஷ்யபேதம் எப்படிச் சித்திக்கும். பழுதை விசாரிக்கிறதற்கு முன்காலத்திலும் விசாரிக்கிற காலத்திலும் பிராந்தனுடைய கண்ணுக்குச் சர்ப்பமாகவே கண்டது. பின் காலத்தில்தான் பழுதை ஆயிற்று. அதுபோல அபரோட்ச ப்ரம மானுபவம் வருகிறதற்கு முன்னும், தரிசன சிரவண மனன நிதித்தியாசன காலங்களிலும் பராபரங்களுக்குப் பேதமும், பின் அபேதமுங் கூடும். அது சுவர்க்கபலம்போலாகமாட்டாது. ஸத்திய வஸ்துவை ஸத்தியமாகவே யடைந்திருப்பதினால் நித்திய கைவல்லிய ஸ்வரூபமாகும். பரன் அமிசி யென்றும், அபரன் அம்சமென்றும், சுருதிகளாலே பேதம் காணபித்தோமே அந்த அபரனாகிய பிரத்தியகாத்துமாவும் மூலாதாரம் முதலான ஆதாரங்களில் அணுவாயும், கட்டைவிரல் ஆகாரஜோதியாயும், ஒட்டைச்சாண் ஜோதியாயும், ஈகமுள்ளின் நுனிபோலவும், ஆலம்விதை சாமை அரிசி ரோமத்தின் நுனிமுதலான சூட்சுமாகாரங்கள் போலவும், வெகுவிதமான பேதங்களாகச் சொல்லப்படுகிறான். இவனைத் தியானயோகத்தில் தரிசித்துப் பின்மகா வாக்கியார்த்தத்தைச் சிரவணஞ்செய்து அந்தச் சிரவணத்தினாலுண்டான சாட்சி விர்த்தியை மனனஞ்செய்து அந்த மனனத்தினாலுண்டான அகண்டாகார விர்த்தியை நிதித்தியாஸனஞ்செய்து அந்த நிதித்தியாசனத்தினால் ஸமாதி காலத்தில் அகண்டைக ரஸஸ்வரூபியாயும் எழுந்திருந்து விவகரிக்கும் காலத்தில் முன் அநுபவித்த நினைவு மாத்திரத்துடன் பிராரப்த போகத்தைப் புசிக்கும் ஜீவன்முக்தர்கள் அபேத ஞானிக ளென்று சொல்லப்படுவார்கள். அந்த அகண்ட ரஸஸ்

வரூபமான ஸப்ரதியோகிக ப்ரம்மமே எக்காலத்திலும்ஸசஜமாக அநுபவிக்கப் படும்போது விதேக முக்தர்க ளென்று சொல்லப் படுவார்கள். ஸரூபமநோநாசம் சீவன் முக்தியென்றும், அரூபமநோநாசம் விதேக முக்தியென்றும், பிரசித்தம். இந்தச் சீவன்முக்தி விதேகமுக்திகளும் தேகமுள்ள காலத்தில்தான். பின்பு பந்தமோட்சாதி சகல துவந்துவங்களும் அற்ற நிஷ்ப்ரதியோகிக வஸ்து மாத்திரமாகச் சேஷிப்பதால் அவ்விடத்தில் யாதொரு விவகாரமுங் கூடாது. யாதொரு ஸப்ரதியோகிக சச்சிதானந்த பரப்பிர்மத்தைத்தானே யறிந்து தியானயோகத்தால் கைவல்லியத்தை யடைய வேண்டுமென்று நாலுவேதங்களும் சொல்லுகின்றனவோ அந்தப் பிர்மத்தை அதிகாரியாயுள்ள சிஷ்யனுக்கு ஸத்குருவானவர் நன்று யுபதேசிக்க வேண்டியது.

பின்னும், மஹாவாக்கியங்கள் நாலு விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. எப்படி எனில், ரிக்வேசத்தில் தேகாதி சாட்சியான பிரக்ஞானமே ப்ரம்மமென்றும், யஜுர்வேதத்தில் நான் ப்ரம்மமாயிருக்கிறே னென்றும், ஸாமவேதத்தில் அது நீயாகிறு யென்றும், அதர்வண வேதத்தில் இந்த ஆத்மா ப்ரம்மமென்றும் இப்படிச் சொல்லி யிருப்பதில் நாம் அநுபூதி மீமாம்சையில் நிரூபித்தபடி நிரூபிக்கிறோம். இந்த ரிக்வேதம் முதலான மகா வாக்கியங்கள் நான்கும் முன்னுக்கு முன் சாத்தியமாகையால் பின்னுக்குப்பின் சாதனங்களாகும். எப்படிஎனில், முதலாவது, ஸப்ரதியோகிசபிர்மாத்மைக்கியாநுபவப்பிரயோஜனத்தைச் சொல்லுகிறபடியால் அன் அநுபவ வாக்கிய மாகும். இரண்டாவது அந்த அநுபவத்துக்குச் சாதனமான ஐக்கியாப்யாஸ விஷயமாகையால் அது அப்யாஸ வாக்கியமாகும். மூன்றுவது அந்த அப்பியாசத்துக்குச் சாதனமான உபதேச சம்பந்தமுள்ள தாகையால் அது உபதேச வாக்கியமாகும். நான்சாவது அந்த உபதேசத்துக்குச் சாதனமான அதிகாரத்தைக் கொடுக்கிற பிரத்தியகாத்ம தரிசன ஹேதுவாகையால் அது தரிசன வாக்கியமாகும். இப்படி, அதிகாரி, சம்பந்தம், விஷயம், பிரயோஜனம், எ-

ன்ற அநுபந்த சதுஷ்டயத்தைப் போதிப்பிக்கிற நாலு வாக்கியங்களையும் குருமுகமாய்ச் சிரவணாதிகள் செய்யவேண்டியது.

சங்கை—சொல்லிய நாலு வாக்கியங்களும் ஒரேவிதமாகப் பராபரைக்கியத்தைச் சொல்லுவதால் வாக்கியார்த்த பேதஞ் சொல்லுவது நியாயமில்லை.

உத்தரம்—நாலுவாக்கியங்களும் மேலுக்குமேல் சாதனமாயிருப்பதால் அபேதங்கூடாது. இரண்டாவது மூன்றாவதான அப்பியாஸவாக்கிய உபதேசவாக்கியங்களுககு மாத்திரம் குருசிஷ்ய விஷயமாகையால் பேதங்கூடும். மற்ற முதலாவது நான்காவது வாக்கியங்களுக்கு யாதொரு காரணமும் சொல்ல இடமில்லாம லிருப்பதால் பேதங்கூடாதென்று எண்ணத்தக்கதில்லை. இந்த ஆத்மா ப்ரம்மமென்றும், பிரஞ்ஞானம் ப்ரம்மமென்றும், சொல்லுவதில் பேதம் துலக்கமாயிருப்பதால் அப்படியல்லவா. இந்த ஆத்மா ப்ரம்மமென்றதில் மற்றொரு ஆத்மா ப்ரம்மமில்லையென்ற அர்த்தம் தோற்றுகின்றது. ப்ரக்ஞானம் ப்ரம்மமென்றதில் யாதொன்றும் தோற்ற இடமில்லை. ஆகையினாலே துவைதவிஷயமான தரிசன வாக்கியத்துக்கும், அத்துவைத விஷயமான ப்ரயோஜன வாக்கியத்துக்கும், எவ்வளவும் அபேதம்சொல்லக்கூடாது.

சங்கை—ஆனால், அதேநீ, நீயேஅது, என்று மற்றொரு சுருதியில் சொல்லிய வாக்க்கியங்களுக்கும் பேதமுண்டோ?

உத்தரம்—அதுநீயாகிறு யென்று ஒன்பதுதரம் செய்த உபதேசத்தில்கூட மேலுக்குமேல் சுவேதகேதுவென்ற சிஷ்யனுக்குச் சம்சயம் தீர்ந்த மூலமாய்ப் பேதங்கண்டிருக்க இதில் கேட்க வேண்டியதில்லையே. ஆகிலும் சொல்லுகிறோம். அதே நீயென்ற முதலாவது உபதேசத்தினால் சிஷ்யனுக்குப் பிரதிபந்தத்துடன் கூடின பரோட்சஞானம் உண்டாகிறது. திரும்பவும் நீயே அதென்ற இரண்டாவது உபதேசத்தினால் அவனுக்குப் பிரதிபந்தகம் அற்ற அபரோட்சஞானம் உண்டாகிறது.

சங்கை—ஆனால் ப்ரம்மாத்மைக்கிய அபரோட்சஞானம் சச்சிதானந்த ப்ரம்மஸ்வரூப கைவல்லிய மோட்சத்துக்கு ஸாதனமென்று ப்ரசித்தம். அந்த அபரோட்ச ஞானம் சற்குருவின் இரண்டாவது உபதேசத்தால் சித்திக்குமாகில் அப்பியாஸ வாக்கியத்துக்குப் பிரயோஜனமில்லையே.

உத்தரம்—அபரோட்ச அநுபவத்தால் மோட்சம் சித்திக்குமே அன்றி அபரோட்சஞானத்தால் சித்திக்கமாட்டாது. அந்த அநுபவம் வரவேண்டுமானால் அப்பியாஸ வாக்கியத்தை யநுசரித்து நிரந்தரம் பிரமாத்மைக்கிய பாவனை செய்ய வேண்டியது. சிரவணத்தினால் பரோட்சஞானமும், மனனத்தினால் அபரோட்சஞானமும், உண்டாகின்றது. நிதித்தியாஸனத்தினால் அபரோட்ச அநுபவமுண்டாகிறது. சிரவண, மனன, நிதித்தியாஸனங்களினாலுண்டாகின்ற ஞானங்களும் ஞானம், விஞ்ஞானம், ஸம்மியக்ஞானம், என்று கிரமமாக மூன்று விதமாய் உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே ஸம்யக்ஞானமென்ற அபரோட்சாநுபவம் ஸித்திக்க வேண்டிய நிமித்தியம் அப்பியாஸ வாக்கியத்தை அவசியம் அநுசரிக்க வேண்டியது. பின்னும் அதே நீ, நீயே அது, என்று, உபதேசித்தது போல நானே யவன். அவனே நான், என்று மற்றொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அப்பியாஸ வாக்கியமே நாம்சொல்லிய அர்த்தத்துக்குப் பிரமாணமாக இருக்கின்றது.

சங்கை—நீயே அது என்ற இரண்டாவது உபதேசத்தால் ப்ரதிபந்தகம் அற்ற அபரோட்சாநுபவம் வரமாட்டாதாகையால் அப்பியாஸ வாக்கியத்தை அநுசரிக்க வேண்டுமென்று சொன்னீர். அந்த அப்பியாஸ வாக்கியத்தையும் மாறிச்சொல்லவேண்டியதேது.

உத்தரம்—நானேயது என்ற அப்பியாஸத்தினால் அபரோட்சாநுபவம் வந்தபோதிலும் அந்த அநுபவமும் ஜீவன்முக்தி விதேக முக்தி யென்று இரண்டு விதமாகச் சாஸ்திரங்களில் பிரசித்தமாகையால் விதேகமுக்தி கிடைக்கவேண்

டிய நிமித்தம் அதே நானென்று மாறிச் சொன்னது அவசியமாகவே யிருக்கிறது.

சங்கை—ஜீவன் முக்தர்களுக்கு விதேசமுக்தி கிடையா விட்டால் மோட்சாதிதாவஸ்தை கிடையாதோ?

உத்தரம்—பிராரப்தம் நசிக்கும் காலத்தில் ஜீவன்முக்தருக்கும் மோட்சாதிதாவஸ்தை கிடைக்கும். சந்தேகமில்லை. ஆகிலும் பிராரப்த திருஷ்டதுக்கத்தினால் நிரம்பவும் ஜீவன் முக்தர்கள் பாதிக்கப் படுகின்ற படியால் விதேக முக்தர்கள் அந்தத் துக்கத்தினாலும் பாதிக்கப்படாமல் சகலத்தையும் மறந்து வாஸனாத்திரய ஈஷணாத்திரயங்கள் முதலான சகலதுன்பங்களும் அற்று, நித்திய சுத்த புத்த முக்த ஸ்வரூபிகளாக இருப்பதால் அந்த முக்தியை அவசியம் அடைய வேண்டும். பின்னும் "பதக்குக் குடித்தால் உழக்குத் தங்கும்" என்ற நியாயம் போல் விதேகமுக்தியைக் குறித்துப் பிரயத்தனம் செய்தால் ஜீவன்முக்தி ஸித்திக்கலாம். ஜீவன்முக்தி ஸித்தியாமல் பிராரப்த தேக நாச மாத்திரத்தில் அந்த அதிதாவஸ்தை ஸித்தியாது. அபரோட்சாநுபவம் அற்ற அபரோட்சஞானிக்குக் கூடப் பிர்மலோகத்தின் வழியாகக் கிரம முக்தியென்று உபநிஷத்தினால் துலங்குகின்ற படியால் ஸத்தியோமுக்தி யென்ற ஜீவன் முக்தி கிடைக்க வேண்டிய நிமித்தம் நானே பிர்மம் என்று புழுவானது குளவியைப் போல இடைவிடாமல் பிர்மத்தியானம் செய்ய வேண்டியது. இப்படித் தியான யோக நிஷ்டை அற்றவர்களுக்கு ஒருக்காலும் ஜீவன் முக்தி கிடையாது.

சங்கை—இந்த மகாவாக்கியச் சிரவணாதிகளில் உண்டான அபரோட்சாநுபவமன்றி, ஸ்நான, ஜப, பூஜை, உபவாஸாதிகளினாலே மோட்சம் அடையக் கூடாதோ? வியாஸாசாரியார் புராணங்களில் ஒருதரம் சிவ, ராமா, என்று ஜெபம்செய்தால் மோட்சம் கிடைக்கிறதென்று சொல்லி இருக்கிறாரே அவர் சொற்களை வீணென்று யாராலும் சொல்லக் கூடாதே?

உத்தரம்—புராணங்களில் சொல்லியது போலச் சுருதிகளிலும்சொல்லப்படுகிறது. எப்படிஎனில் எவன் சிவா என்று சொல்லுவானே அவன் சண்டாளனாக இருந்த போதிலும் அவனோடுகூடப் போஜனம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால் இப்படிப்பட்ட வசனங்கள் பட்சியாபட்சிய விபாக சாஸ்திரத்தைக் கெடுக்கிறபடியால் அர்த்தவாதங்களென்று முமூட்சுக்களினாலே பரிகரிக்கத் தக்கதுகள். அப்படி யன்றி அந்த வசனங்களைப் பரமார்த்தமாகவே எண்ணிச் செய்யக்கூடாத காரியங்களைச் செய்யவும், புசிக்கக்கூடாத போச்சியங்களைப் புசிக்கவும், உலகத்தில் வெகுஜனங்களைக் காணலாச்சுதே. இது தான் கலிபுருஷனுடைய சாமர்த்தியமென்று எண்ணத்தக்கது. இப்படிப்பட்ட எதேச்சாசாரத்துக்கு முக்கிய காரணங்களான அருபா ஸங்கப்பிர்மவாதத்தையும், வாமசாக்த மார்க்கத்தையும், பிரதிஷ்டாபனம் செய்த ஸுஷுப்திப்பிர்ம வாதியினாலே உலகத்துக்கு நிரம்பவும் கெடுநேரிட்டிருப்பதால் இந்த நம்முடைய சாஸ்திரங்களைத் தானே மோட்ச ஸாதனமாக எப்பொழுதும் விசாரித்து வர்ணாசிரம நித்தியகர்மங்களைத் தப்பாமற் செய்து கொண்டு சகல பிராணிகளும் கிருதார்த்தாளாக வேண்டிய நிமித்தம் சகல சாஸ்திரார்த்தங்களையும் சுருக்கமாக நிரூபிக்கலாச்சுது.

இரண்டாவது மஹாவாக்கியார்த்தப் பிரகரணம்
முற்றிற்று.

ஸப்தபூமிப்பிரகரணம்.

இப்போது சப்தபூமியின் விவரத்தை வியக்த்தமாகச்சொல்லுகின்றோம். வராகோபநிஷத்தில் நிதாகனென்ற மகரிஷிக்கு ரிபு என்ற மஹரிஷியானவர் உபதேசிக்கிற பிரகாரம் அகாரம், உகாரம், மகாரம், அர்த்தமாத்திரை, என்று பிரணவம நாலுவிதமாகும். இதில் அகாராதிகளின் ஸ்தூல, சூட்சும, பீஜ, துரீயபேதத்தால் பதினாறு பாகமாகும். விசுவ, தைஜஸ, பிராக்ஞ, துரீயனென்ற நான்கு ஜீவர்களும், விசுவவி

சுவன், விசுவதைஜஸன், விசுவப்பிராக்ஞன், விசுவதுரீய ன்என்று இப்படிப் பதினறு பாகமாகும். அதில் பிரணவ மாத்திரை பதினறும் தத்பதார்த்தமாகும். ஜீவமாத்திரை ப தினறும் துவம்பதார்த்தமாகும். இதில் அகார ஸ்தூலாம்சம் முதல் உகார பீஜாம்சம் வரையிலுள்ள ஏழுமாத்திரைகளு ம் முமுட்சுக்களாவார்கள். அவர்கள் சுபேச்சை, விசாரணை, தனுமானஸீ, என்ற மூன்று பூமிகளிலும் கிரமமாக இருப்பா ர்கள், உகாரதுரீயமான நான்காவது பூமியில் பிர்மவித்தும், மகார துரீயமான ஐந்தாவது பூமியில் பிர்மவித்துவரனும், அர்த்தமாத்திரா துரீயமான ஆறுவது பூமியில் பிர்மவித்துவ ரீயானும், அதீதமான ஏழாவது பூமியில் பிர்மவித்துவரிஷ்ட னும் ஆவார்கள்.

இந்தநான்கு பூமிகளுக்கும் ஸத்துவாபத்தியென்றும், அ ஸம்ஸக்தியென்றும், பதார்த்தபாவனையென்றும், துரீயகை யென்றும், கிரமமாகப் பெயர்கள் சொல்லப்படும். நான்கா வது முதலான நான்கு பூமியிலுள்ளவர்கள் ஜீவன்முக்தர்க ளென்று சொல்லப்பட்டபோதிலும், வித்தையும், வரனையும், ஜீவன்முக்தரென்றும், வரீயானையும், வரிஷ்டனையும் விதேக முக்தரென்றும், சொல்லலாம். இந்த நான்கு பேர்களுடைய செய்கைகளைச் சுருக்கமாய் நிரூபிக்கிறோம். பிர்மவித்தானவ ர்கள் பாமரர்களுக்கு ஒப்பாக ஏஷணாத்திரயத்தினல் பாதிக்க ப்பட்டுச் சகல பிரவிர்த்திகளையும் செய்துகொண்டு தன்னாசி ரமத்துக்கு உசிதமான நித்திய கருமங்களைச் செய்து வந்த போதிலும், நைமித்திக காமிய கர்மங்கள் அற்றவராயும், எப் போதும் சம்சாரத்தில் உபாதி உள்ளவராயும், சிஷ்யாளுக்கு உபதேசிக்கும் காலத்தில் அதிதைரியமுள்ளவராயும், பாமரா ளைக்காட்டிலும் விலட்சணராகக் காணப்படுவார்கள். அது நன்றாய் அவருடன் பழகுகிறவர்களுக்குத் தான் தெரியும். பிரமவித்துவரானவர்கள் தன்பிராரப்தத்துக்கு வேண்டிய போக நிமித்தியமாக உசிதமான்பிரவர்த்தியைச் செய்த போ திலும் அதின் இலாப, நஷ்டத்தைக் குறித்து விசனப்படாம லும், திர்ஷ்ட துக்கம் வந்த காலத்தில்கூட தைரியமுள்வள

ராயும், சிஷ்யாளுக்கு உபதேசிக்கிறதில் கூட உபாதியுள்ளவ ராயுமிருப்பார்கள். வரீயாளுனவர்கள் யாதொரு பிரவிர்த்தி களையும் செய்யாமல், அந்நியராலே கொடுக்கப்பட்ட பூர் வாநுஸாரமான அன்னத்தைப் புசித்துக் கொண்டு நொ ண்டி, குருடன், செவிடனைப் போல வியவகார நடை முதலானவைகளும் அற்றுப், படுக்கவும், இருக்கவும் மாத் திரம் சக்தி யுள்ளவரா யிருப்பார்கள். வரிஷ்டனுனவர்க ள் பிறராலே கொடுக்கப்பட்ட ஜலம்கூட உள்ளிறங்காம ல் காற்றைப் புசித்துக் கொண்டு தேகம் உருளப் புறள க்கூடச் சக்தியில்லாமல் மலைப்பாம்புபோலக் கிடையில் கி டப்பார்கள். இந்த நால்வரும் கிரமமாகச் சிசுஞானியென் றும், பாலஞானியென்றும், குமாரஞானியென்றும், யுவ ஞானி யென்றும், சொல்லப்படுவார்கள். வரிஷ்டன் சிசு வைப்போலவும், வரீயான் பாலனைப்போலவும், வரன் குமார னைப்போலவும், வித்து யுவாவைப்போலவும், பிரவர்த்திகளி ல் இருப்பார்களென்று ஊகிக்கத்தக்கது. பின்னும் இந்த ஏழு பூமிகளில் உள்ளவர்களுடைய ஸகுணபக்திவாஸனை, ஜீவபர பேதவாஸனை, லோகவாஸனை, சாஸ்திரவாஸனை, தேகவாஸ னை, சொப்பனவாஸனை, சுஷுப்த்திவாஸனை, யென்ற ஏழுவி த அசுபவாசனைகளும் சாதனசதுஷ்டயவாஸனை, சிரவண வாஸனை, மனனவாஸனை, நிதித்தியாஸனவாஸனை, நிர்விகற்ப ஸமாதிவாஸனை, நிஸ்ஸங்கற்பஸமாதிவாஸனை, நிர்வாஸனை, ஸமாதிவாஸனை, யென்ற ஏழுவித சுபவாஸனைகளினலே தா ரூடே நசித்துப் போகும். ஸமாதிகளும் ஸம்பிரஞ்ஞாதமெ ன்றும், அஸம்பிரஞ்ஞாதமென்றும், இரண்டு விதமாகும். இ து ஸவிகற்பம் நிர்விகற்பமென்றும், சுருக்கமாகும். விஸ்தா ரமாவது திர்சியாநுவித்தமென்றும், சப்த்தாநுவித்தமென்று ம், நிர்விகற்ப மென்றும், மூன்றுவித ஸ்தப்திபாவத்துடன் ஆ றுவிதமாக ஸரஸ்வதிரகஸியோபநிஷத்தில் சொல்லப்பட்டி ருக்கின்றது. யாதொரு ஜீவன்முக்தாள் நாலு விதமாகச் சொல்லப் பட்டார்களோ அவர்கள் துரியனென்றும், து ரியாதீதனென்றும், தத்தோதீதனென்றும், ஸன்மயனென்று

ம், நாலுவிதமாகச் சிவதத்துவ ஸூதாஸிதியில் சொல்ல
ப்படுகிறார்கள். பந்தமோட்சங்கள் கற்பிதங்களென்று வெ
கு சுருதிகள் சொல்வதினால் அவைகளுக்கு அநேகத்துவ
ம் கூடும் ஆனால் மோட்சங்களுக்குக் கணக்கில்லையென்று
எண்ண வேண்டாம். மோட்ச ஸ்வரூபங்களான ப்ரம்மங்க
ளைப் பிரணவப் பிரிவினாலே பதினாறுக் சாண்பித்தோம்.
இன்னம் ஈசோபநிஷத்துமுதல் முக்திகோபநிஷத்து வ
ரையிலுள்ள நூற்றெட்டு உபநிஷத்துக்களில் பரமஹம்ஸபரி
விராஜகமென்றும், நாரதபரிவிராஜகமென்றும், இரண்டு உ
பநிஷத்துக்கள் இருக்கின்றன. அவைகளில் சொல்லிய பிர
காரம் பிரணவ விபாகத்துடன் பிரமபேதங்களை நன்றாக நி
ரூபிக்கிறோம். எப்படியென்றால் பிரணவமானது அகாரம்,
உகாரம், மகாரம், அர்த்தமாத்திரை, நாதம், பிந்து, கலை, க
லாதீதை, சாந்தி, சாந்தியதீதை, உன்மனி, மனோன்மனி,
புரீ, மத்திபமை, பசியந்தி, பரை யென்று பதினாறுமாத்
திரைகளாகும். அதில் ஸ்தூல, ஸூட்சும, காரண, துரீய,
பேதங்களினால் அறுபத்திநாலு மாத்திரைகளாகும். திரும்ப
வும் அவைகள் பிரகிருதி புருஷ சம்பந்தத்தினால் நூற்றிருப
த்தெட்டு மாத்திரைகளாகும். திரும்பவும் சகுண, நிர்க்குண
பேதத்தினால் இருநூற்றைம்பத்தாறு மாத்திரைகளாகுமென்
று இப்படிப் பிரித்திருப்பதில் கைவல்லிய முமுட்சுக்களுக்கு
ஸகுண, நிர்க்குண மாத்திரைகளின் பேதந்தெரிய வேண்டிய
அவசிய மில்லாததினால் மற்ற நூற்றிருபத்தெட்டு மாத்திரை
களை ஸப்த பூமிகளில் அடக்கவேண்டிய விபரஞ் சொல்
லுகிறோம். சுபேச்சை யென்ற முதலாவது பூமிக்கு முந்
திய விவேகாதிசாதனம் நான்கில் ஸ்தூல, சூட்சும, கார
ண, துரீய, பேதத்தால் பதினாறுநீக்கி மற்ற நூற்றுப் ப
ன்னிரண்டு மாத்திரைகளும் பதினாறு பதினாறு வீதம் ஏழு
பூமியிலும் அடங்கும். அதில் நாலாவதுபூமிமுதல் ஏழாவது
பூமி வரையிலுள்ள அறுபத்திநாலு மாத்திரைகளில் பதினாறு
துரீய மாத்திரைகளுண்டு. அவைகளில் வஸிக்கிறவர்கள் பி
ரம்மவித்து, வித்தரன், வித்தமன், அதிதன்; வரன், வாதரன்,

வரதமன், அதிதன்; வரீயான், வரீயதரன் வரீயதமன், அதீதன்; வரிஷ்டன், வரிஷ்டதரன், வரிஷ்டதமன்; அதீதன்; என்று கிரமமானபேர்களுடன் சொல்லப்படுவார்கள். இந்த அகாராதி பிரணவ மாத்திரைகள் சச்சிதானந்த ஸப்பிரதியோகிக ப்ரம்ம ஸ்வரூபங்களைக் காட்டிலும் வேறுபடாமல் தீப்பொறிகளைப்போல ஸ்வகத பேதத்துடன் தானேவிளங்கும். இவைகள் பிரத்தியகாத்ம சமிதன்னியங்கள்போலக் கண்ட ஸ்வரூபங்களாயும் ஆகமாட்டா; அகண்ட ஸ்வரூபத்திலும் இவ்விதமான பேதங்கூடும். எப்படி யென்றால் கண்டங்களான நதிகள் அநேகமாகிலும், அகண்டமான சமுத்திரங்களும் ஏழுவிதமாக அநேகமானவைபோல அகண்ட பிர்ம ஸ்வரூபங்களும் அநேகமாகிறதில் யாதொரு குற்றமுமில்லை. யாதொரு நிஷ்பிரதியோகிக ப்ரம்மமானது பிரணவத்துக்கு அப்புறப்பட்டதாகப் பிரசித்தமா யிருக்கிறதோ அது கண்டமென்றாவது அகண்டமென்றாவது சொல்லப்படாத வஸ்து. ஆகையினாலே அதில் ஸ்வகத பேதங்கூட வில்லை யென்று சொல்லலாம். அந்த ஸ்வகத பேதமற்ற அரூப ப்ரம்மத்தை உபதேசித்து அறிந்த குருசிஷ்யாள் அந்நியோந்நியாசிரய பலத்தை அடைவார்கள். அதெப்படி யென்றால் காட்டாறு வெள்ளம் கடக்கிற நரன் கையெய்த்துப் பிராண ஸங்கடப்படுங் காலத்தில் தனக்கு ஆதாரமான மிதப்புக் கட்டையைஅபேட்சித்துக் கொண்டிருக்கும்போது அப்படியே பிராணசங்கடத்துடன் மிதந்து வருகிற கரடியைக் கட்டையாக எண்ணி அப்படியே அதுவுமெண்ணி ஒன்றுக்கொன்று கட்டிக்கொண்டு தண்ணீரில் அமிழ்ந்தது போல அறியத்தக்கது.

அந்த நிஷ்பிரதியோகிகப் ப்ரமத்தைச் சிரவணத்தினால் அறிந்தவனுக்கு மனோநாச வாஸனாட்சயங்கள் எப்படிவரும். புழுவானது குளவியைத் தியானித்து அதின் ரூபத்தை அடைந்ததுபோலப் பிரம ஸ்வரூபத்தைத் தியானித்த ஜீவனுக்கு ஜீவன்முக்தி மனோநாச வாசனாட்சயங்கள் ஸித்திக்குமே யல்லாமல் தியானம் செய்யாதவனுக்கு ஜீவன்முக்தி

முதலான பலன்கள் கிடைக்க மாட்டா. தியானமும் ஸப்பிரதியோகிக பிரம்த்தில்கூடுமே அன்றி நிஷ்பிரதியோகிகத்தில் ரூபாதியில்லாததினால் கூடாது. இந்த ஸப்பிரதியோகிக பிரமத்தியானாதிகளினாலே அணிமாதி சித்திகளுண்டாகுமே அன்றி கைவல்லிய மோட்சம் கிடையாதென்று எண்ணவேண்டாம். சகுணேஸ்வர தியானாதி உபாசனையினாலே அந்த ஐசுவரியங்கள் அடையத்தக்கதாகையால் சகுணப்பிரமத்துக்கும், ஸப்பிரதியோகிக பிரமத்துக்கும், சாதக, சாதன, சாத்தியாதிபேதங்கள் நிரம்பவுமிருப்பதினாலும் இந்த அநேக விதமான பிரணவமாத்திரா ஸ்வரூபங்களாகிய நிர்க்குண அகண்டபிர்மத்தியானாதிகளினாலே கைவல்லிய மோட்சங்கள் சித்திக்கிறதில் எவ்வளவும் சந்தேகமில்லை. சகுணப்பிர்மத்தில் தாற்பரியப்பட்ட சைவ, சாக்த, வைஷ்ணவ, ஸௌர, காணாபத்திய, காபாலிகாதி மதஸ்தர்கள் தத்துவமஸியென்ற மகாவாக்கியார்த்த விரோதிகளாகக் கெட்டுப் போனார்களே. நிஷ்பிரதி யோகிகமென்ற நிர்க்குணாதீத பிர்மத்தில் தாற்பரியப்பட்ட ஸௌஷுப்தவாதிகளான சூன்னியாத்துவைதவாதிகளும் மனோநாச வாஸனாட்சயங்கள் சித்தியாமல் வர்ணாசிரம தர்மங்களை விட்டுப் பசுக்கள் போலவும், மிலேச்சாள், க்ஷபணகாள் முதலான வேதபாகியாளைப் போலவும், உலகத்தில் சஞ்சரிக்கிறபேர்களையும், நிரம்பவுங் காணலாச்சுதே. ஆகையினாலே ஸகுணத்துக்கும் நிர்க்குணாதீதத்துக்கும் மத்தியிலுள்ளநிர்க்குணமான சப்பிரதியோகிகப் பிர்மத்தைத் தியானாதிகளினாலே நிரந்தரம் உபாசித்துப் புருஷார்த்தத்தை அடையும்படியான நல்ல மார்க்கத்தை ஸத்புருஷாள் ஆசரியிக்க வேண்டுமென்று நம்மாலே ஸற்குரு கிருபாகடாக்ஷத்துடன் உபதேசிக்கலாச்சுது.

சங்கை—அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்சஞானம், அபரோட்சஞானம், சோகமோட்சம், திருப்தி, என்று ஏழு அவஸ்தைகள் சாஸ்திரங்களில் கேள்விப்படுகிறதே, அவைகளும் இந்த ஏழுபூமிகளிலும் கிரமமாக அடக்கலாமோ?

உத்தரம்—அந்த ஏழு அவஸ்தைகளுக்கும், இந்த ஏழு பூமிகளுக்கும், எவ்வளவும் சம்பந்தமில்லை. ஆகிலும் அஞ்ஞானம் முதலான மூன்று அவித்தியாவஸ்தைகளும் பரோட்சஞானம் முதலான மூன்றவித்தியாவஸ்தைகளினால் நசித்துத் திருப்தி யென்ற ஏழாவது அவஸ்தை சேஷிக்காது. இதில் சுஷுப்திப் பிர்மவாதிகளால் பரோட்சஞானத்தினால் அஞ்ஞான நாசமென்றும், அபரோட்சஞானத்தினால் ஆவரணநாசமென்றும், சோகமோட்சத்தினால் விட்சேபநாசமென்றும், சொல்லபபடுகிறது: அது சரியல்ல என்று நாம்சொல்லுகிறோம், ஏனென்றால் காரணம் நசித்தபின் காரியம் நசியாமலிருக்கக் காரணமில்லாததினால் பரோட்சஞானத்தினால் விட்சேபநாசமென்றும், அபரோட்சஞானத்தினால் ஆவரணநாசமென்றும், சோகமோட்சத்தினால் அஞ்ஞானநாசமென்றும், நிரூபிக்கிறது நியாயமாயிருக்கிறது.

சங்கை—இப்படியானால் சிரவணத்தினாலுண்டான ஞானத்தினால் அஞ்ஞானம் நசிக்குமென்றும், மனனத்தினாலுண்டான விஞ்ஞானத்தினால் சம்சயம் நசிக்குமென்றும், நிதித்தியாசனத்தினாலுண்டான சம்மியக்ஞானத்தினால் விபரீயயம் நசிக்குமென்றும், தீர்மானித்த சுருதி வாக்கியங்கள் வீணாகுமே ?

உத்தரம்—பிரதிபந்தாஞ்ஞானமென்றும், மூலாஞ்ஞானமென்றும், அஞ்ஞானம் இரண்டு விதமாகும்; அதில் ஆவரணத்தின் காரியமான விட்சேபத்தைக்காட்டிலும் வேறுபடாத ப்ரதிபந்தாஞ்ஞானம் பரோட்சஞானத்தினால் நசிக்குமே தவிர ஆவரணத்தின் காரணமான மூலாஞ்ஞானம் அதனால் நசிக்கமாட்டாது. முதலாவது அவஸ்தை ஆறாவது அவஸ்தையால் நசிக்கவேண்டுமென்பது நல்லயுத்தியாயுமிருக்கின்றது, ஆதியிலுண்டான ஆகாசம் அந்தத்தில் லயிக்கிறபடியால்.

சங்கை—இப்படியானால் சிரவணத்தினால் அஞ்ஞானமும், மனனத்தினால் சம்சயமும், நிதித்தியாசனத்தினால் விபரீ

யயமும், சமாதியினால் விட்சேபமும், நசிக்குமென்ற அவ ஆதோபநிஷத்துக்கு விரோதம் வருமே?

உத்தரம்—ஸரஸ்வதீரகசியோபநிஷத்தினால் அஞ்ஞானம் இரண்டு விதமென்று நிரூபித்ததுபோல் விட்சேபமும், மாயிக ஆவித்தியக பேதத்தினால் இரண்டு விதமாக அநுபூதிமீமாம்சையில் நிரூபித்திருக்கிறோம். ஆகையினாலே ஸமாதியினால் நசிக்கவேண்டிய விட்சேபம் இவ்விடத்தில் சொல்லப்படவில்லை யென்று அறியத்தக்கது.

சங்கை—இந்தச் சிரவணாதி சாதனங்களில் சிரவணமே ஞானோற்பத்தியில் பிரதானமென்றும், மற்ற மனன நிதித்தியாசனங்கள் கெவுணமென்றும், பராசரர் வியாசர்முதலான முனிகள் சொல்லி யிருப்பதினால் நிதித்தியாசனப் பிரதானமாகச்சொல்லுகிறது சரியல்லவே?

உத்தரம்—நாமெவ்வளவும் முனிகளுடைய வசனங்களுக்கு விருத்தமாகச் சொல்லத்தக்கவர்களல்ல. பரோட்சஞானோற்பத்தியில் சிரவணமே பிரதானமாகும். அபரோட்சஞானோற்பத்தியில் மனன நிதித்தியாசனங்களே பிரதானமென்று உபய பட்சத்திலும் விரோதம் அற்றிருப்பதால் சம்சய விபரியாசமென்ற இரண்டு பிரதிபந்தக நிவர்த்தியில் மனன நிதித்தியாசனங்களே பிரதானமென்று அந்தமுனிகளே சொல்லி யிருப்பதினாலும் நாம் சொன்ன அர்த்தத்தில் யாதொரு குற்றமுமில்லை. வியாசர் முதலான ஆசாரியர்களும் ஸப்பிரதிபந்தஞானமென்றும், நிஷ்பிரதிபந்தஞானமென்றும், ஞானத்தை இரண்டுவகையாகப் பிரித்து முந்தியது சிரவணத்தினால் உண்டாகி கிரம முக்தியைக் கொடுக்கும். பிந்தியது மனன நிதித்தியாசனங்களினால் உண்டாகி ஸத்யோ முக்தியைக் கொடுக்குமென்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகையினாலே ஞானபேதமும், மோட்சபேதமுமுண்டு. மோட்சாதீதமான இடத்தில்தான் யாதொரு பேதமுமில்லையென்ற பிரமாண பலங்கொண்டு சாதனபேதம், சாத்தியபேதம் இவ்விதங்களான சகலபேதங்களையு

ம் ஒன்றாய் அறியவேண்டு மென்று வெகுவித பேதங்கள் ந ம்மால் உபன்னியாஸம் செய்யலாயிற்று. அவித்தியாகாரிய ங்களான பந்தங்கள் அநேக விதமாகுமானால் வித்தியாகா ரியங்களான மோட்சங்கள் ஏன் அநேக விதங்களாகமாட் டா.

சங்கை—ஆனால் மோட்சாதீதாவஸ்தையும் அநேக வித ங்களாகு மென்று ஏன்சொல்லககூடாது?

உத்தரம்—அந்த அதீதாவஸ்தையானது நிஷ்பிரதியோ கிக ப்ரம்மஸ்வரூபமாகையால் சுருதி வசனத்தினால் விபா சமில்லையென்று சூத்திரக்காரர்களால் சொல்லப்பட்டிரு ப்பதாலும் அந்த இடத்தில் யாதொரு பேதமுஞ் சொல்ல இடமில்லை.

மூன்றுவது ஸப்தபூமிப்பிரகரணம்
முற்றிற்று.

சோடசாவஸ்தாப்பிரகரணம்.

இனிபரோக்ஷஞானோப யுக்தமான பஞ்சகோச விசாரணை யைச் செய்து ஜாக்கிரத் ஜாக்கிரத் முதலான பதினாறு அவ ஸ்தைகளையும் விசாரித்து ஜீவன் முக்தானுடைய அநுபவ பேதங்களையும் நிருபிக்கப் போகிறோம்.

அன்னமய பிராணமய மனோமய விஞ்ஞானமய ஆனந்த மயங்களான பஞ்ச கோசங்களில் அன்னமயகோசம் ஸ் தூல சரீரம்; மற்றமூன்று கோசங்கள் ஸூக்ஷமசரீரம்; அஞ் சாவதான ஆனந்த மயகோசம் காரண சரீரம். இந்தப் பஞ் சகோசத்துக்கு அப்புறப்பட்டவனே பிரத்தியகாத்மாவாவ ன். இந்தப் பரிச்சின்ன பிரத்தியகாத்மாவை அபரிச்சின்னப் ரப்பிர்மத்தோடே கூடக்கலந்து திர்ப்தியடைய வேண்டிய நிமித்தியம் தத்துவமஸியென்று குருக்களாலே உபதேசிக் கப்படுகிறது. சிலபூர்வீகாள் இந்த ஆனந்தமயனாகிற ஸௌ ஷுப்த ஜீவனைத்தானே பரப்பிர்மமென்று சொல்லுகிறார்க ள். அந்த ஸௌஷுப்த பிர்ம்மவாதிகளுடைய பட்சம் கிரம

பவும் ஹீனமாயிருக்கிறது. ஸுஷுப்தி விஷயத்திலுள்ள சுருதிகளோவென்றால் சிறிது ஜீவன் ஸுஷுப்தியில் பிர்மத்தையடைகிறானென்று சொல்லுகின்றது, சிறிது நாடியை அடைகிறானென்று சொல்லுகின்றது; இதில் எந்தப்பட்சம் நியாயமானதென்று விசாரிக்குமளவில் நாடியை அடைகிறானென்றதே நியாயமாக இருக்கிறது. பிர்மத்தை யடைகிறானென்று பூர்விகாள் சொல்வதற்கு என்ன யுக்தியென்றால் ஜாக்கிரத் ஸ்வப்பன மென்ற இரண்டு அவஸ்தைகளிலும் கண்ட விசேஷம்போல் ஸுஷுப்தியில் யாதொரு விசேஷமுங் காணாததினாலும், பிர்மம் நிர்விசேஷமென்றே சுருதிகளெல்லாம் சொல்வதினாலும், நான், இது, அதுஎன்ற நானாபேதங்கள் இல்லாததினாலும் அந்த ஸுஷுப்தியே பரப்பிர்மம், பரஞ்சோதி; அதையடைந்தவனே உத்தமபுருஷன் என்று சொல்லுகிறார்கள். இவ்விதமான சித்தாந்தமுஞ் செய்திருக்கிறார்கள். நாடிவிஷயங்களான வாக்கியங்களுக்குப் பிர்மத்தை அடைகிற மார்க்கத்தில் நாடிகளிருப்பதினால் விரோதமில்லையென்று ஸமாதானஞ் சொல்லுகிறார்கள். கோட்டைக்குள்ளிருந்தாலும் தேவதத்தன் கோட்டையிலிருக்கிறானென்றுசொல்வதுபோல் என்ற இவ்வித திர்ஷ்டாந்தத்துடன் பரமாத்மாவைத்தான் அடைகிறானென்று சித்தாந்தித்திருக்கிறார்கள். அதுகூடாதென்று நாம்சொல்லுகிறோம். ஏனென்றால் அஞ்ஞானாவரணத்தோடே கூடினதாகவும், ஸொப்பன ஜாக்கிரத்தில் காணப்படுகிற சகல விசேஷங்களுக்கும் விதையாகவும், சகல அனர்த்தங்களுக்கும் இருப்பிடமாகவும் இருப்பதால் அந்த ஸுஷுப்தியை யடைந்தவன் உத்தமபுருஷனாகில் பசு, பட்சிமுதலான ஸகல ஜெந்துக்களுக்கும் அநாயாஸமாக மோட்சம் வரத்தெரிவதினாலும் அந்த வாதம் அஸமஞ்சஸமென்று தீர்மானிக்கிறது நியாயமானதாயிருக்கிறது. பின்னை யெப்படி யென்றால் நாடியைப் பற்றுகிறானென்று சொல்வதே யுக்தமாகும். பிர்மவிஷயங்களான சுருதிவாக்கியங்களுக்கும் 'கங்கையில் யிடைச்சேரி' யென்று இலட்சணைபோல் பிர்மத்தின் சமீபத்தில் நாடியானது இருப்பதினால்

விரோதமில்லை. இந்த ஸௌஷுப்த பிர்மவாதத்தையும், நிஷ்ப்பிரதியோகிகப் பிர்மத்தையும், பிரதிஷ்டாபனஞ்செய்து ஒருக்கால் சிரவணமாத்திரம்போதும். மனன நிதித்தியாஸனங்கள் மந்தாதிகாரி விஷயங்களென்று ஸித்தாந்தித்திருக்கிற பூர்விக ஆபாஸ வேதாந்திகளுடைய துர்மார்க்கத்தை யென்னென்று சொல்லப்போகிறோம்.

சங்கை—நியாயந்தானே. ஒருதரம் கேட்டமாத்திரத்தில் எவனுக்குத் தத்துவ ஸாட்சாத்காரம்வரவில்லையோ அந்த மந்தாதிகாரியைக் குறித்து ஆவர்த்தி உபயோகப்படுமென்று லோகத்திலுங் காணப்படுகிறதே ஏகஸந்த கிராகியென்றும், துவிஸந்தகிராகியென்றும், திரிஸந்தகிராகியென்றும், அதிகாரி தாரதம்மியமாகையால் ஒருதரம் சிரவணம்போதுமென்று பூர்விகாள் சொன்னதில் குற்றமில்லையென்பதற்கு,

உத்தரம்—தத்துவமஸியென்ற ஏகரூபமான உபதேசத்தில்கூட சாந்தோக்கியமென்ற உபநிஷத்தில் சுவேதகேதுவென்ற சிஷியனுக்கு ஒன்பதுதரம் ஆவர்த்தி செய்வித்ததில் மேலுக்குமேல் ஸம்சயம் தீர்ந்ததினால் பேதங்கண்டிருக்க மூன்றுவிதமான இந்தச் சிரவண, மனன, நிதித்தியாசனங்களுக்குப் பேதமில்லாமல்போக நிமித்தங்காணோம். மயித்ரேயிக்கு யாஞ்ஞவல்க்கியர் பிரகதாரண்ணியமென்ற உபநிஷத்தில் தெரிசனம்பண்ணவேண்டும், சிரவணம்பண்ணவேண்டும், மனனம்பண்ணவேண்டும், நிதித்தியாசனம் பண்ணவேண்டுமென்று உபதேசித்திருக்கிறார். இதின் அர்த்தம் அத்தியாத்ம உபநிஷத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் மகாவாக்கியார்த்தத்தைக் குருமுகமாகக் கேட்கிறதே சிரவணமென்றும், அந்த அர்த்தத்தை யுக்திகளினாலே சிந்திப்பதே மனன மென்றும், அந்தச் சிரவண மனனங்களினாலே சேஷிப்பித்த அர்த்தத்தில்தானே யேகாக்கிரமாக மனதை நாட்டிப் பார்ப்பதே நிதித்தியாசனமென்றும், ஒன்றுக்கொன்று விலட்சணமான அர்த்தங்களிருக்கிறதே. அஞ்ஞான, சம்சய, விபரியயங்கள் நீங்கவேண்டிய நிமித்தியமன்றே சிரவண, மனன, நிதித்தியாசனங்கள் சொல்லப்

பட்டிருக்கின்றன. அவைகளை யெப்படி ஆவர்த்தி யென்று சொல்லலாம். உத்தமாதிகாரியாயிருந்தபோதிலும் வேதத்தில்முதல் காண்டத்தை ஒருதரம் ஸந்தை சொல்லிக் கிரகித்தவனுக்கு இரண்டாவது மூன்றாவது காண்டங்களுடைய ஒரு ஸந்தைகூட வேண்டியதில்லையென்று எப்படிச் சொல்லலாம். ஆகையினாலே மந்தாதிகாரிக்கு அநேகந்தரம் தரிசனம், அநேகந்தரம் சிரவணம், அநேகந்தரம் மனனம், அநேகந்தரம் நிதித்தியாசனம் வெகுகாலம் செய்யவேண்டும். உத்தமாதிகாரிக்கு ஒருதரம் தரிசனம், ஒருதரம் சிரவணம் ஒருதரம் மனனம், ஒருதரம் நிதித்தியாசனமும் செய்யவேண்டுமென்று நாம் நிரூபிக்கிற அர்த்தமே நியாயமாக இருக்கின்றது. இன்னமும் இந்த அர்த்தத்தை மேல் பிரகரணத்தில் விஸ்தாரமாக நிரூபிப்போம்.

இப்போது ஜாக்கிரத் ஜாக்கிரத் முதலான பதினாறு அவஸ்தையின் பேதங்களை ஞானவாஸிஷ்டத்தில் சொல்லிய பிரகாரம் சுருக்கமாக நிரூபிக்கின்றோம். ஜாக்கிரத்ஜாக்கிரத், ஜாக்கிரத்சொப்பனம், ஜாக்கிரத்ஸுஷுப்தி, ஜாக்கிரத்துரீயம் என்று இப்படியே ஸொப்பன ஜாக்கிரத்து முதலானவைகளும் ஸுஷுப்தி ஜாக்கிரத் முதலானவைகளும் துரீயஜாக்கிரத் முதலானவைகளும் கூடி பதினாறாகும். இதில் ஜாக்கிரத்ஜாக்கிரத் அவஸ்தையாவது எப்படியெனில் ஸ்தூல ஸூட்சும காரணங்களான சகல திரிசிய பதார்த்தங்களில் இது என்னுடையது என்ற பாவனையற்றதே ஜாக்கிரத் ஜாக்கிரத்தாகும். சச்சிதானந்தஸ்வரூபியான தன்னிடத்தில் திரிசிய பரம்பரையை அறிந்து நாமரூபங்களைத் தியாகம் பண்ணுவதே ஜாக்கிரத்ஸொப்பனமாகும். பரிபூர்ண சிதாகாச ஸ்வரூபியாயுள்ள தன்னிடத்தில் போத ஸ்வரூபத்தைத் தவிர வேறே ஒன்றுமில்லையென்று அறிவதே ஜாக்கிரத்ஸுஷுப்தியாகும். ஸ்தூலாபாஸ காரணங்களான மூன்றுவித காரணங்கள் நசியாமற்போனாலும் அவைகளில் மித்தியாத்துவ நிச்சயமே ஜாக்கிரத்துரீயமாகும். ஸதூலாஞ்ஞானம் நசித்தும் ஆபாஸகாரண

சேஷ்டைகளினாலேயெனக்கு யாதொரு பந்தமுமில்லையென்று அறிவதே சொப்பனஜாக்கிரத் ஆகும். காரணஞ்ஞானம் நசித்ததினால் திரஷ்டறு தெரிசன திர்சியங்களான திருபுடி பேதம், அதின்காரியமான தூக்கம் விஞ்ஞானம், இவைகளில்லை யென்று அறிவதே ஸ்வப்னஸ்வப்னமாகும். அதிசூட்சும விமரிசத்தினால் அசஞ்சலையான தன்புத்தி விர்த்தியானது எப்போது போதத்தில் நசிக்கிறதோ அப்போதுள்ள அவஸ்தை ஸ்வப்நஸுஷுப்தி யாகும். ஸஹஜாநுபவம் வந்தும் அகண்டாகார விர்த்தியின் ஒடுக்கம் நேரிடாததினால் ஆநந்தானுபவம் ஸஹஜமாகாமல் இருப்பதே ஸ்வப்நதூரீயமாகும். சின்மையாகாரத்தை அடைந்து அகண்டாகார விர்த்தி ஒடுங்குவதே ஸுஷுப்திஜாக்கிரத்தாகும். அகண்டாகார விர்த்தியில் வெகுகாலம் அநுபவிக்கப்பட்ட ஆநந்தானுபவஸ்திதியில் ஸமமான ஸ்வருபத்தை யடைவதே ஸுஷுப்திஸ்வப்நமாகும். திரசியமான அகண்டாகார விர்த்தியும் நசித்துக் கேவலம் அகண்டைக ரஸபாவனையே ஸுஷுப்திஸுஷுப்தியாகும். அந்த அகண்டைக ரஸாநுபவம் பாவனையை அபேட்சியாமல், தன்னால் ஆவிர்பவிப்பதே ஸுஷுப்திதூரீயமாகும். அந்த ரஸானுபவம் ஜாக்கிரத்திலும் ஸஹஜமாக இருப்பதே தூரீயஜாக்கிரத்தாகும். அது ஸ்வப்நத்திலும் ஸஹஜமாவதே தூரீயஸ்வப்நமாகும். அது ஸுஷுப்தியிலும் ஸஹஜமாவதே தூரீயஸுஷுப்தியாகும். அந்த அகண்டைக ரஸாநுபூதியும் தேற்றாங்கொட்டைபோல் சகல அவித்தியாகாரியங்களான கல்மஷத்தைப்போக்கித் தானும் விலயப்படுவதே தூரியதூரீயமாகும். இப்படிக்கொத்த பதினாறு அவஸ்தைகளுக்கும் அப்புறப்பட்டதாயும் வாக்குக்கும் மனசுக்கும் எட்டாததாயும், நாமரூபம் அற்றதாயும் இருக்கின்ற நிஷ்பிரதியோகிக பிர்மத்தைஜாக்கிரத்ஜாக்கிரத்தான முதலாவது அவஸ்தையைக்கூட அநுபவியாத மூடர்கள் வாக்கினால் புலம்புவது நிரம்பவும் அநுசிதமாக இருக்கின்றது.

சங்கை—இந்தப்பதினாறு அவஸ்தைகளும் சுக்தி ரஜதம் போலவும், ரச்சு ஸர்ப்பம் போலவும், ஸ்தாணு சோரன்போ

லவும், பிராந்தியினால் கற்பிக்கப்பட்ட[illegible]தால் இந்த அவஸ்தைகளை அநுபவித்துக் கழித்துப்போட வேண்டுமென்று நியமனஞ் செய்யக் கூடாது. எப்படி ஸ்தூலஸமஷ்டி பிரபஞ்சத்தைப் பொய்யென்று எண்ணிக் கழித்துப்போடவேண்டியது உசிதமோ அப்படியே பொய்யென்று இந்த அவஸ்தைகளையும் எண்ணிப்போட வேண்டியது. மாயா கற்பிதங்களை யெல்லாம் நாமரூபத்தோடுகூடவே நசிப்பித்துப் பின் மோட்சமடைய வேண்டுமென்று தீர்மானித்தால் கிரம முக்தி நேரிடுமே அன்றி ஜீவன் முக்தி நேரிடாது. அப்போது ஜீவன் முக்தியைப் பிரதிபாதிக்கிற சாஸ்திரங்கள் வீணாதும். அளவு சங்கையற்ற மாயாகாரியங்களை ஒருவராலேயும் அநுபவிக்கக் கூடாது. முன்சொல்லிய அவஸ்தைகளும் பதினாறுதானென்று தீர்மானிக்க இடமில்லை. முந்திய பிரகாணத்தில் அகாராதி நூற்றிருபதெட்டு மாத்திரைகளான வெகு அவஸ்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னம் எவ்வளவு அவஸ்தைகளுக்குச் சாஸ்திரம் இடம் கொடுத்திருக்கின்றதோ நமக்குத் தெரியாது. வேதசாஸ்திரங்களோ அனந்தமென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது. சகல வேதங்களையும் படித்து அவைகளில் சொல்லிய சகல அர்த்தங்களையும் அறிந்து அநுபவித்தால்தான் மோட்சம் கிடைக்குமென்று ஸித்தாந்தித்தால் ஒருவருக்கும் மோட்சம் கிட்டாதே? ஆகையினாலே சுருக்கமாக மாண்டூக்யமென்ற உபநிஷத்தில் சொல்லிய ஜாக்கிரத், ஸ்வப்ந, ஸுஷுப்திகளான மூன்று அவஸ்தைகளை விசாரித்துத் தள்ளிபபோட்டுத் துரீயமான பரமாத்மாவே ஸத்திய ஸ்வரூபியென்று நிச்சயிப்பதே ஸம்மியக்ஞானம். அதினாலேயே கைவல்லிய முண்டாகுமென்று சொல்வதற்கு,

உத்தரம்—மாயாகாரியங்களைப்போல் இந்தப் பாப்பிர்ம அவஸ்தைகளையும் அளவு சங்கை அ[illegible]றதாக எண்ணக்கூடாது. ஸமுத்திரங்களின் தண்ணீருக்கு அளவில்லாமற் போனாலும் ஸமுத்திரங்களுக்கு ஏழாகச்சங்கியை கண்டது போலவும், ஒருதோப்பிலுள்ள மரங்களின் இலைகளுக்குச் சங்கி

யைஅற்றபோ[illegible]மாங்களுக்குச் சங்கியை கண்டதுபோலவும், மாயா[illegible]பததியா காரியங்களான அவஸ்தைகளின் விசேஷங்களுக்குச் சங்கியை அற்றபோதிலும் அவஸ்தைகளுக்குச் சங்கியை கண்டிருக்கின்றது. இந்தத் திர்ஷ்டாந்தங்கள் பிர்ம்மாநுபூதி மீமாம்ஸா பாஷியங்கள் பண்ணுங்காலத்திலும் நம்முடைய மனசுக்குத் தோன்றாமல், இப்போது தோன்றின படியினாலே விரம்பவும் ஸந்தஷ்டாளாகின்றோம். வேதங்கள் அனந்தமென்று யாதொன்று சொல்லப்பட்டதோ அதைக்குறித்துச் சொல்லுகின்றோம். நாலுவேதங்களிலுஉள்ள சாகைகள் ஆயிரத்துநூற்றெண்பது. அவைகளில் ஒவ்வொரு சாகைக்கு ஒவ்வொரு உபநிஷத்தாகும் அந்த உபநிஷத்துகளில் சாராம்சமான உபநிஷத்துக்கள் நூற்றெட்டு. அவைகளில் பத்து உபநிஷத்துக்கள் பரோட்ச ஞானோப யுக்தமாகும். அந்தப் பத்தோடுகூடின இருபத்திரண்டு உபநிஷத்து அபரோட்ச ஞானோப யுக்தமாகும். அந்த முப்பத்திரண்டோடு கூடின எழுபத்தாறு உபநிஷத்து விதேகமுக்திக்கு உபயுக்தமாகுமென்று ஸ்ரீஇராமசந்திர மூர்த்தியினாலே அநுமார் பொருட்டு முக்திகோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே, வேதங்களுக்குச் சங்கியை யில்லை யென்று சொல்லக்கூடாது. வேதத்துக்கு அந்தமில்லாமற் போனால் வேதாந்தமென்ற வியவகாரம் எப்படி உண்டாகும். அந்த ஸாராம்சங்களான நூற்றெட்டு உபநிஷத்துகளையும் நன்றாகப் பரிசோதித்துப் பார்வை யிட்டதில் ஸத்குரு கிருபையினாலே நாரதபரிவிராஜகம், பரமஹம்ஸபரிவிராஜகமென்றும் சொல்லப்பட்ட உபநிஷத்துக்களில் சொல்லிய அகாரம் முதலான பதினாறுமாத்திரைகளின் பிரிவினால் கூடிய நூற்றிருபத்தெட்டு மாத்திரைகளைக்காட்டிலும் அதிகமான நிர்க்குணமாத்திரை ஒன்று கூட மற்றொரு உபநிஷத்தில் சொல்லப்பட இல்லை யென்று அறிந்திருக்கிறோம். ஆகையினாலே தசோபநிஷத்தினால் கிரம முக்தியும், முப்பததிரண்டினால் ஜீவன்முக்தியும், நூற்றெட்டினால் விதேக முக்தியும் கிடைக்க வேண்டிய

மிமித்தியம் அந்த உபநிஷத்துகளில் சொல்லிய தத்துவ விசேஷங்களை நன்றாக அறியவேண்டும்.

சங்கை—இப்படி உபநிஷத்துக்களை மூன்று விதமாகப் பிரித்துச் சொன்ன ஸ்ரீஇராமசந்திரமூர்த்திக்குக் கிரமமுக்தி, ஜீவன்முக்தி, விதேகமுக்தி, யென்று மூன்றுவித பலபேதத்தை நிருபணஞ் செய்யத் தாற்பரிய மென்று சொல்லக் கூடாது. ஸகல உபநிஷத்துக்களுக்கும் பிர்மம் ஒன்றே விஷயமென்று சொல்ல வேண்டும், அப்படிச் சொல்லாவிட்டால் அநுபந்த சதுஷ்டயம் பேதப்படும். அதிகாரி, ஸம்பந்த, விஷய பிரயோஜனங்களான அநுபந்த சதுஷ்டயத்தை அநேகமாகப் பூர்விகாள் நிரூபிக்கவில்லையே. இப்போது நூதனமாகப் பிர்மம்அநேகம், பிர்மஞானிகள்அநேகாள், மோட்சங்கள் அநேகம் என்று இவ்விதமான பேதங்களை நிரூபித்தால் அத்வைத சாஸ்திரத்துக்கு நிரம்பவும் விரோத முண்டாகுமே. அத்வைதத்தில்தானே ஸகல சாஸ்திரங்களுக்கும், சகல ஆசாரியாளுக்கும், தாற்பரியமென்று பிரசித்தமாயிருக்கின்றது. சைவ, சாக்த, வைஷ்ணவாள், முதலானபேதவாதிகளோ தாந்திரிகாளானதினாலே வேதபாஹ்யாள் என்று கழிக்கப்பட்டிருக்கிறார்களே. ஆகையினாலே வேத பிராமாணிகாளாயுள்ள உங்களாலே இப்படிக் கொத்த பேதங்கள் பிரதிஷ்டாபனஞ் செய்யத் தக்கதில்லை.

உத்தரம்—ஸ்ரீராமசந்திர மூர்த்தியாலே முக்திகோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற வாக்கிய பலங்கொண்டு நாம் அநுபந்த சதுஷ்டய பேதத்தைக் காட்டினோமே அன்றி பிரமாணம் இன்றிச் சொல்ல இல்லை. அப்படியே பிரணவமாத்திரைகளின்பிரிவு பேதமாகக் கண்டிருக்கின்றது. எப்படியென்றால் பத்து உபநிஷத்துகளில் ஒருமாத்திரையும், நாலு மாத்திரையும், சொல்லப்பட்டிருக்கின்றன. முப்பத்திரண்டில்எட்டுமாத்திரையும், பதினாறுமாத்திரையும், சொல்லப்பட்டிருக்கின்றன. நூற்றெட்டில் அறுபத்துநாலு மாத்திரையும், நூற்றிருபத்தெட்டு மாத்திரையும், சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான பேதங்களினால் மேலுக்குமேல் ஆதிக்கங்கண்டிருக்க எப்படி அநுபந்த சதுஷ்டய பேதமில்லையென்றுசொல்லலாம். ஸ்ரீஇராம சந்திர மூர்த்தியும் விஸ்பஷ்டமாகப் பேதத்தைச் சொல்லியிருக்க அவருக்கு அப்படித் தாற்பரியமில்லையென்று எப்படிச் சொல்லலாம். ஸத்தான பிர்மம் ஒன்றே சகல வேதங்களுக்குந் தாற்பரியமென்றதிலும் விரோதமில்லை. அகண்டமான பிரணவத்தில் சகல ஸ்தூலாத்துவைத வேதசாஸ்திரங்களுக்குத் தாற்பரியமாகையால் அநேக மாத்திரைகளாகக்கண்டிருக்கப் பட்ட பிரணவத்தில் சகல ஸூக்ஷம காரண துரியாதி பேதமுள்ள அத்வைத வேதசாஸ்திரங்களுக்குத் தாற்பரியமாகையாலும் இரண்டு பக்கத்திலும் விரோதமில்லை. ஆகையினாலே ஸப்பிரதி யோகிகப் பிர்மங்கள் அநேகமென்று திருடமாகவே சொல்லலாம். நீங்களும் ஸகுணப்பிர்மமென்றும், நிர்க்குணப்பிர்மமென்றும், இரண்டு பிர்மத்தை ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். நிர்க்குணப்பிர்மம் ஒன்றே ஸத்தியமாகச் சொல்லுகிறோமே தவிர உங்களைப்போல் அநேக பிர்மங்கள் ஸத்தியமென்று நாங்கள் சொல்லவில்லை யென்று கேட்பீர்களோ? உங்கள் பட்சத்தில் நிர்க்குணத்தைக் காட்டிலும் நிஷ்பிரதி யோகிகமென்று வேறில்லையே? அந்த நிர்க்குணப்பிர்மம் ஏகமென்றும் ஸத்தியமென்றும் எப்படிச்சொல்லக்கூடும். நிர்க்குணமென்றால் ஸகுணப் பிரதியோகிகத்துவம். ஏகமென்றால் அநேகப்பிரதியோகிகத்துவம்நேரிடுமே? ஆகையினாலே உங்கள் பட்சத்தில் பிர்மத்துக்கு ஏகத்துவ நிர்க்குணத்துவாதி தர்மங்கள் சித்திக்க இல்லை. நம்முடைய பட்சத்திலோ என்றால் மாயிகங்களாயும், ஆவித்தியகங்களாயும், உள்ள அநேகத்துவ ஸகுணத்துவாதி தர்மங்களுக்கு அப்புறப்பட்ட வித்தியாமயங்களாயும் ஸ்வகதபேதத்துடன் கூடினவைகளாயுமுள்ள ஸப்பிரதியோகிகப்பிர்ம மாத்திரைகளில் அர்த்த தர்மங்கள் நன்றாய்ச் சித்தித்திருக்கின்றன. ஆகையினாலே சூட்சும புத்தியுள்ளவர்கள் இந்தப் பிரகரணத்தை நன்றாய்ப் பரியாலோசனை பண்ணி இதில்சொல்லிய பிரகாரம் எப்பொழுதும் அப்பியாஸம் பண்ணுவார்க

ளாகில் உடனே சகல ஸம்சார துக்க ஸமுத்திரத்தையுங் கடந் நித்தியானந்த கைவல்லிய மோட்சத்தை அடைகிறதில் எவ்வளவும் சந்தேகம இல்லை.

சங்கை—நூற்றிருபத்தெட்டு மாத்திரைகளுக்கு அப்புறப்பட்டதாயும், மோட்சாதீதமாயும், வாக்குக்கும் மனசுக்கும் எட்டாததாயும் யாதொரு நிஷ்பிரதி யோகிகப் பிரமம் உங்களாலேயே ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கின்றதோ, அந்தப் பிர்மத்தைத் தானே குருமுகமாகச் சிரவணாதிகள் பண்ணி ஜீவன் முக்தி, விதேக முக்திகளை அடைந்த பெரியோர்களுக்கு முன் சொல்லிய ஸப்ரதியோகிகப் பிர்ம பேதங்கள் தெரிய வேண்டியதில்லை, ஆகையினாலே குருக்களிடத்தில் நிஷ்பிரதி யோகிகப்பிர்மத்தைத்தானே கேட்கவேண்டு மென்றுசொல்வதற்கு,

உத்தரம் — பிரகதாரண்ணியமென்ற உபநிஷத்தில் கார்கி யென்ற பெண்ணுக்கு யாஞ்ஞவல்கியரென்ற மகரிஷியானவர் சொல்வது எப்படி யென்றால், கேட்கக் கூடாத அந்த நிஷ்பிரதியோகிக தேவதையை யென்னிடத்தில் கேட்பாயாகில் உன்தலை வெடித்துப் போகுமென்று சொல்லிய வாக்கியத்தை அந்தக் கார்கியானவள் கேட்டுப் பதில் சொல்லாமல் இருந்ததினால் அவளுக்கு யாதொரு கெடுதியும் நேரிடவில்லை. சாகல்லியனென்ற மற்றொரு பிராமணர் அவரோடுகூடக் குதர்க்கம் பண்ணினநிமித்தம் தலைவெடித்துக் கெட்டுப்போனாரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே வாக்குக்கும், மனசுக்கும் எட்டாத அந்தப் பிர்மத்தைக் குருக்களிடத்தில் கேட்டால் சாகல்லியருக்கு ஒப்பாக நேரிடும். பின்னும் அந்தப் பிர்மம் ஜீவன்முக்தருடைய பிராரப்த தேகம் நசித்த பின் அடையத் தக்கதாகையால் முமுட்சுவான அதிகாரியினால் கேட்கவுங் கூடாது. குருவால் சொல்லவுங் கூடாதென்று அடிக்கடி சொல்லி யிருக்கின்றோமே, ஆகையினாலே எதேச்சாசாரத்துக்கு ஏதுவாயிருக்கிற நிஷ்பிரதியோகிகப் பிராந்தியை விட்டுப்போட்டு ஸப்பிரதியோகிக ஸச்சிதான

ந்த பிர்மத்தைத்தானே குருவினிடத்தில் கேட்டு நித்திய, நிரந்தர அப்பியாஸத்தினால் ஜீவன்முக்தி அடைய வேண்டியது.

நாலாவது சோடசாவஸ்தாப் பிரகரணம் முற்றிற்று.

ஜீவன்முக்திஸாதனப்பிரகரணம்.

இப்போது ஜீவன்முக்திக்கு முக்கிய ஸாதனங்களான தரிசன, சிரவண, மனன, நிதித்தியாசனங்களை நன்றாய் நிருபிக்க வேண்டிய நிமித்தம் ஹிதோபதேசமான ஐந்தாவது பிரகரணம் ஆரம்பிக்கப்போகின்றது. எப்படியென்றால் பிரகதாரண்ணியத்தில் நாலாவது, ஆறுவது அத்தியாயங்களில் மயித்திரேயிக்கு யாஞ்ஞுபவல்கியர் உபதேசம் செய்கின்றபிரகாரம் நிருபிக்கப்படுகின்றது. மூர்த்தாமூர்த்தப்பிராம்மணத்தில் மஞ்சள் வர்ணம் போல, வலது கண்ணுக்குள் இருக்கப் பட்ட ஆத்மாவானவர் தரிசனம் பண்ணவேண்டியவர், சிரவணம் பண்ண வேண்டியவர், மனனம் பண்ண வேண்டியவர், நிதித்தியாசனம் பண்ண வேண்டியவர், என்று சொன்ன பின் ஆத்மாவினுடைய தெரிசனத்தினால், சிரவணத்தினால், மனனத்தினால், நிதித்தியாசனத்தினால் இந்தச் சகல காரிய பிரபஞ்சமும் அறியப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியிருக்கையில் ஸௌஸூப்தப்பிர்மவாதியினாலே வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. எப்படியென்றால் வலதுகண் முதலான ஆயதன பரிச்சேதனம் அற்ற பரிபூர்ணாத்மாவானவர் தெரிசனம் பண்ண வேண்டியவர். அதற்குச் சாதனங்கள் சிரவணாதி மூன்றுமாகும். பின்னும் எப்படிப் பட்ட ஆத்மா சிரவணம் பணணப் பட்டாரோ அந்தச் சகல சாஸ்திர ஸித்தாந்த ஆத்மாவே மனன, நிதித்தியாசனங்களில் அநுவர்த்திப்பதால் நிதித்தியாசனம் பண்ண வேண்டுமென்று வேறே பிரகரணம் வே

ண்டியதில்லை. எவனுக்கு ஒருதரம் சிரவணமாத்திரத்தினால் ஸ்வரூபஸாட்சாத்காரம் வரவில்லையோ அந்த மந்தாதிகாரியைக் குறித்து மனன, நிதித்தியாசன விதிகள் உபயுக்தமாகும். பின்னும் சிரவண, மனன, நிதித்தியாஸனங்கள் மூன்றும் தரிசனத்தின் பிரகாரங்களாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இது சரியல்லவென்று நம்மால் சொல்லப்படுகின்றது. ஏனென்றால் பிரமாத்மைக்கியாநுபவமானது தரிசனத்தின் பிரகாரம் ஆகுமே தவிரச், சிரவணாதிகள் ஆகமாட்டாதுகள். அவைகளோ என்றால் ஆத்மைக்கிய விசாரணையின் பிரகாரம் ஆகும். ஆகையினாலேதரிசனத்தின் பிரகாரம் சிரவணாதிகளென்று ஒருக்காலுஞ் சொல்லக்கூடாது. யாதொன்று மந்தாதிகாரியைக் குறித்தென்று சொல்லப்பட்டதோ அதைக்குறித்துச் சொல்லுகின்றோம். ஒருதரம் சிரவணமாத்திரத்தினால் ஸாட்சாத்காரம் ஆகுமென்றது சகல சாஸ்திர யுக்தி அநுபவங்களுக்கும் விரோதமாயிருக்கின்றது. ஸாட்சாத்காரமாவது சகல பிரதிபந்தங்களும் அற்ற ஸ்வரூபாநுபவமென்று பிரசித்தம். அதில் அசுத்தி, அஞ்ஞானம், ஸம்சயம், விபரியயங்களான நான்கு பிரதிபந்தங்களுண்டு. இந்த நாலும் தரிசனாதி நாலு சாதனங்களினாலே நிவர்த்தி அடைந்தால் அந்த அநுபவம் ஸாட்சாத்காரமென்று சொல்லப்படும். எந்தப் பிரதிபந்தத்துக்கு எந்தச் சாதனம் விதிக்கப்பட்டிருக்கின்றதோ அதன்றி மற்றொரு சாதனத்தினால் அது நிவர்த்தியை அடையமாட்டாது. இப்படியே அவதூதோபநிஷத்திலும், பராசரபுராணத்திலும், விஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே உத்தமோத்தமாதிகாரிக்கும் ஒருதரம் சிரவணமாத்திரத்தால் அபரோட்சாநுபவமுண்டாக மாட்டாது.

சங்கை—பூர்வ ஜன்மத்தில், மனன, நிதித்தியாசனங்களினாலே ஸம்சய விபரியயங்கள் நிசேஷமாய் நசித்த உத்தமாதிகாரிக்கு அற்பமான அஞ்ஞானத்தினால் கிடைத்த இந்த ஜன்மத்தில் ஒருதரம் சிரவணமாத்திரத்தால் ஸர்வ பிரதிபந்தமும் அற்ற ஸ்வரூபஸாட்சாத்காரம் வரலாமே!

உத்தரம்—அதுவரமாட்டாது. ஏனென்றால் அந்திய பிரதிபந்தமான விபரியயம் நசித்தபின் ஆதி பிரதிபந்தமான அஞ்ஞானம் நசியாமலிருப்பது கூடாது. தரிசனாதி நாலு சாதனங்களும் மேலுக்குமேல் ஸாத்தியமாகையினாலே முன்னுக்கு முன் ஸாதனங்களாகுமே அன்றி தரிசனம் ஸாத்தியமென்றும், சிரவணாதி மூன்றும் ஸாதனமென்றும், சொல்வது எள்ளளவுங் கூடாது. ஏனென்றால் தரிசனம் பண்ண வேண்டும் என்றமட்டும் சுருதி சொல்லி யிருக்கத் தரிசனம் பண்ண வேண்டும் ஆனால் என்றொரு சப்தத்தைக் கூட்டிச் சொன்னால் மற்றச் சிரவணாதிகளிலும் ஆனாலென்ற சப்தங் கூட்டவேண்டுமென்று மற்றொருவர் சொல்ல இடம் நேரிடும். பின்னும் தரிசனம் பண்ண வேண்டுமென்ற குருவசனத்தை அநுசரியாத சிஷியன் சிரவணாதி விதிகளையும் அநுசரிக்க இல்லை யென்றுசொல்ல இடம் நேரிடும். இது நிரம்பவும் பெரியோர்களுக்கு விரோதமாகும். ஆகையினாலே தரிசனாதி நாலும் சாதனமே தவிர சாத்தியமான பிர்மாத்மைக்கிய ஸம்மியக் தெரிசன நிர்த்தேச விஷயம் முந்திய தரிசன விதியென்றது கூடாது. பின்னும் யாதொன்று சொல்லப்பட்டதோ யாதொரு ஆத்மா சிரவணத்திலோ அந்த ஆத்மாவே மனன நிதித்தியாசனங்களிலென்று சொல்லிய அதைக்குறித்துச் சொல்லுகிறோம். தரிசனம் பண்ணப்பட்ட ஆத்மா சிரவணத்தில், சிரவணம் பண்ணப்பட்ட ஆத்மா மனனத்தில், மனனம் பண்ணப்பட்ட ஆத்மா நிதித்தியாசனத்திலும் அநுவிர்த்திப்பதினால் பிரகரணபேதங் கூடும். எப்படி உலகத்தில், பால், தயிர், வெண்ணெய், நெய்யென்று நாலுவகை திரவியங்களில் செவ்வியம் என்ற சொல் ஸமானமா யிருந்த போதிலும் பாலில் தயிரும், தயிரில் வெண்ணெயும், வெண்ணெயில் நெய்யும், எடுக்கக் கண்டோமோ அப்படித் தெரிசனாதி நாலு சாதனங்களிலும் ஆத்ம சப்தம் ஸமானமா யிருந்த போதிலும் தரிசன, ஞான, விஞ்ஞான; ஸம்மியக்ஞானங்களான பேதங்கண்டிருக்கின்றது. பின்னும் உலகத்தில் சண்டுகளோடுகூடின நெல்லை குத்தவு

ம், உமியோடு கூடின அரிசியை வழுக்கிடவும், தவிடோடே கூடின அரிசியைக் களையவும், கழிநீரோடே கூடின அரிசியைப் பாகம் பண்ணவும், காணுமே? அப்படிக் கண்டால் அசுத்தியோடே கூடின ஆத்மாவைக் கண்டு, அசுத்தி அஞ்ஞானங்களோடே கூடின ஆத்மாவைக் கேட்டு, அசுத்தி அஞ்ஞானம் சம்சயங்களோடே கூடின ஆத்மாவை மனனம் பண்ணி, அசுத்தி அஞ்ஞானம் சம்சயம் விபரியயங்களோடே கூடின ஆத்மாவை நிதித்தியாசனம் பண்ணி, முக்தி யடைந்ததாகச் சொல்ல வேண்டும். இது எவருக்குத்தான் பரிகாசத்தின் பொருட்டாக மாட்டாது. ஆகையினாலே தரிசனாதி நாலு ஸாதனங்களும் நாலு பிரகரணமாகவே வியாக்கியானம் பண்ணுகின்றது யுக்தமாகும். இந்தத் தரிசனாதிநாலு ஸாதனங்களை ஆசிரியாமல் ஒருவருக்கும் அபரோட்சாநுபவம் உண்டாக மாட்டாது. ஆகையால் இன்னமும் இந்தச் சாதனங்களைத்தானே விசதமாக நிரூபிக்கின்றோம், சிரவணம்அங்கியென்றும், மனன நிதித்தியாசனங்கள் அங்கங்களென்றும், ஸுஷுப்தி பிர்மவாதியினாலே சொல்லப்படுகின்றது. அது பரோட்சஞானத்தைக் குறித்துச் சொல்லலாமே தவிர அபரோட்ச ஞானத்தைக் குறித்துச் சொல்லக் கூடாது. எப்படியென்றால் விபரியயப் பிரதி பந்த நிவர்த்தி அன்றி ஒருவருக்கும் அபரோட்ச ஞானம்வரத்தக்க தல்ல. அந்த விபரியய நிவர்த்தியும் நிதித்தியாசனம் அன்றி ஒருவருக்கும் வரத்தக்கதல்லவென்று சொன்னோமே. ஆகையால் நிதித்தியாசனம் அங்கி யென்றும், மற்ற தெரிசன, சிரவண மனனங்கள் மூன்றும் பூர்வ பூர்வாங்கங்களென்றும், நிர்த்தாரணை பண்ணப்படுகின்றது. இந்தத் தெரிசனாதி நான்கின் பிரகாரங்களையும் விஸ்தாரமாகச் சொல்லுகின்றோம். அங்குஷ்டாகாரமாயும், ஒற்றைச் சாணாகாரமாயும், ஆலம்விதைபோலவும், சாமையரிசி போலவும், நெல்வால் நுனிபோலவும், உரோமநுனிபோலவும், அநேக விதமான ஆகாரங்கள் ஆத்மாவுக்கு உபநிஷத்துக்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்த ஆத்மாவைச் சித்தசுத்தியின் நிமித்தியம் முதலாவது கு

ருமுகமாக வலதுகண்ணுக்குள் புருவத்தினிடையில் லாவது ஹிருதய மத்தியிலாவது ஒரு இடத்தில் அறிந்து நிரந்தரத்தியானத்தினால் சூரியமண்டலம் போலாவது சந்திரமண்டலம் போலாவது நட்சத்திரம் போலாவது மின்கொடிபோலாவது தெரிசனம் பண்ணுவதே தெரிசனத்தின் பிரகாரமாகும். அந்தக் கண்ட ஸ்வரூபனான ஆத்மாவை ஸத்குருமுகமாசத் தத்துவமஸியென்ற மஹாவாக்கியத்தினாலே அகண்டபரிபூர்ண ஜியோதி ஸ்வரூபனாகக் கேழ்வியாகிறதே சிரவணத்தின் பிரகாரமாகும். அந்த அகண்ட ஸ்வரூபனான ஆத்மாவைத் திர்சிய பிரபஞ்சசாட்சியாக வெகுவித யுக்திகளினாலே நிச்சயித்து அந்த திர்சியானுவித்த ஸமாதிபண்ணுவதே மனனத்தின் பிரகாரமாகும். அந்த திர்சிய சம்பந்தப்பட்ட ஆத்மாவைத் திர்சிய சம்பந்தமன்றி அஸங்க ஸச்சிதானந்த ரஸாதி சப்தங்களினாலே பராபரபேதமன்றி யேகாந்தத்தில் சப்தானுவித்த ஸமாதிபண்ணுவதே நிதித்தியாசனத்தின் பிரகாரமாகும். இப்படிப்பட்ட நிதித்தியாசனத்தினாலே தான் ஜலத்தோடே ஜலம்போலவும், எண்ணெயோடே யெண்ணெப்போலவும், பாலோடே பால்போலவும், முன் தெரிசினாதிகளுக்கு விஷயப்பட்ட ஆத்மா பரமாத்மாவோடே ஐக்கியத்தை யடைகிறான். ஆகையினாலே அங்காங்கிகளான இந்த மனன நிதித்தியாசனங்கள் இரண்டும் ஜீவன் மோட்சேச்சுக்களினாலே அவசியம் பண்ணத்தக்கது.

சங்கை—இந்தத் தெரிசனாதி நாலு ஸாதனங்களையும் கிரமமாக ஸாதியாமல் ஸ்வரூப ஸாட்சாத்காரம் வரமாட்டாதென்று தாங்கள் சொல்வது சரியல்லவே. ஏனென்றால் சிரவணங்கள் கூடச்செய்யாமல் கர்ப்பத்தில் வாமதேவருக்கு ஸாட்சாத்காரமானதாகக் கேழ்வியாகிறதே?

உத்தரம்—கர்ப்பத்தில் வஸிக்கும் காலத்தில் ஸகலருக்கும் திரிகாலஞ் ஞானமுண்டாகிறபடியால் வாமதேவருக்கு ஸகல பிரதிபந்தமும் நிவர்த்தியாகிற அக்காலத்தில் பூர்வ ஜன்மத்தில் உபதேசித்த குருவாக்கியத்தை நினைத்து ஒருத

ரம் மனனமும் நிதித்தியாசனமும் அந்தக் கர்ப்பகோளத்தில் தானே செய்த ஸாட்சாத்காரம் வந்தபடியால் அவ்விடத்திலும் இந்த ஸாதனங்கள் ஸபலமாகவே இருக்கின்றன

சங்கை—வராகோபநிஷத்தில் வாமதேவ மார்க்கத்தை அநுசரிக்கின்ற மந்தாதிகாரிகள் கிரமமுத்திக்குப்பாத்தியப்படுவார்களென்றும், சுகமார்க்கத்தை அநுசரிக்கிறஉத்தமாதிகாரிகள் ஸத்தியோ முக்திக்குப் பாத்தியப் படுவார்களென்றுஞ், சொல்லப்பட் டிருப்பதால் உத்தமாதிகாரிகளுக்குச் சிரவணாதி சாதனங்கள் தேவையில்லையே?

உத்தரம்—இரகசியோபநிஷத்தில் பரமேசுவரனாலே அந்தச் சுகருக்கும் சிரவணாதி மூன்று சாதனங்களும் கிரமமாக உபதேசிக்கப்பட் டிருப்பதுந் தவிர வெகுகாலம் சமாதி பழகியே ஸாட்சாத்காரத்தைச் சுகர் அடைந்தாரென்று சாஸ்திரங்களில் பிரசித்தமா யிருக்கிறது. ஆகையினாலே இந்த ஸாதனங்கள் நாலும் மந்தாதிகாரிகளினாலே வெகுதரமும், உத்தமாதிகாரிகளினாலே ஒருதரமும், அவசியம் அநுஷ்டித்துத் தீரவேண்டியது.

சங்கை—இப்படியானால் ஸற்குருக்களுடைய கடாட்சப் பார்வை மாத்திரத்தினால் முக்தராவாரென்ற வசனங்கள் எடுபட்டுப் போகுமே?

உத்தரம்—அது குற்றமில்லை. ஸற்குருவின் பார்வையினால் ஞானாதிகாரி ஆய்விட்டபடியினால் கிரமமாய்ச் சொல்லிய சாதனங்களினாலே முக்தராவாரென்று அறியத்தக்கது.

சங்கை—பழுதையில் பிராந்தியினால் தோன்றிய ஸர்ப்பம் நிவர்த்திக்கிறதில் யாதொரு ஆயுதமும் அபேட்சிக்கப்பட இல்லையே? இது ஸர்ப்பமல்ல, பழுதைதானென்று இஷ்டருடைய சொல்லுமாத்திரம் வேண்டியதாயிருக்கிறது. பாமாவதி ஒருதரம் மனனம் வேண்டியிருக்கிறது. இவ்வளவே தவிர பழுதை தியானம் பண்ணவும், ஸர்ப்பத்தை அபலாபம் பண்ணவும், உபதேசிக்கக் காணோமே? இப்படியே சுத்தி, ரஜ

தம் முதலான அநேக திர்ஷ்டாந்தங்கள் நிதித்தியாசனம் அனுவசியகம் என்பதில் இருக்கிறதுகளே? ஆகையினாலே வஸ்து யாதார்த்தியம் தெரிய வேண்டிய விஷயத்தில் நிதித்தியாசனத்தை நிரம்பவும் புகழ்ந்து சொல்வது சரியல்ல.

உத்தரம்—சொல்லிய திர்ஷ்டாந்தங்கள் பரோட்சஞாஞேதய விஷயத்தில் கூடுமே தவிர, அபரோட்சஞாஞேதய விஷயத்தில் அந்தத் திர்ஷ்டாந்தங்கள் கூடாது. மிர்த், கட, க்ஷீர, ததி முதலான திர்ஷ்டாந்தங்களை அநுசரித்துப் பரிணமவாதத்தை ஸ்திரப்படுத்தி உபதேசித்தாலொழிய ஸ்வரூப ஸாட்சாத்காரம் விவர்த்த வாதத்தை அநுசரித்த முன் சொல்லிய திர்ஷ்டாந்தங்களினாலே வரத்தக்கதல்ல. இப்படித் தர்க்கம் பண்ண இடமில்லாமலிருக்க வேண்டிய நிமித்தியமாகவே ஸர்வஞ்ஞான யாஞ்ஞவல்கியர் தெரிசனாதிகளோடு சேர்த்து நிதித்தியாசனத்தைச் சொன்னதுந் தவிரப் பிரத்தியேகமாகவும் விதித்திருக்கிறார். எப்படி யென்றால் வாராய் மயித்திரேயி, நீயெனக்குப் பிரியமானதைச் சொல்லுகிறாய். ஆகையினாலே வியாக்கியானம் பண்ணுகிற என்னுடைய வாக்கியத்தின் அர்த்தத்தை நிதித்தியாசனம் பண்ணென்று பின்னும் விவர்த்த வாதத்தை முக்கியமாய் அபிப்பிராயப்படுகிற உன்னாலே அந்த வாதம் பூர்ணமாக ஆசிரயிக்கப்படவு மில்லை. ஏனென்றால் நிதித்தியாசனத்தைப் போல் சிரவண மனனங்களையும் உபேட்சியாதபடியினாலே சாஸ்திரோக்த விவர்த்தவாதமும் உன்பட்சத்தில் ஸித்திக்க இல்லை. ஸகல ஸாதனங்களும், ஸகல ஸாதகாளும், ஸகல ஸாத்தியங்களும் எந்த இடத்தில் காணாமல் போகிறதுகளோ அந்த இடமான நிஷ்ப்பிரதியோகிக ஸத்தா, ஸாமான்னிய ப்பிர்மமே விவர்த்தவாத யோக்கியம் ஆகும். ஆகையால் ஸாதனங்களை உபேட்சித்துப் போட்டு ஸாத்தியத்தை வாக்கினாலேமாத்திரம் சொல்லிக் கொண்டு ஏதேச்சையாக ஸஞ்சரித்துவர்ணாசிரமங்கள் அற்றுக் கெட்டுப்போக இடமாகின்ற உன்னுடைய வாக்கியத்தை ஸ்வபனத்தில் கூடக் கேட்கக் கூடாது.

சங்கை—ஆத்மாவைத் தரிசனம் பண்ண வேண்டுமென்று சொல்லிய சுருதி வாக்கியம் சிரவணத்துக்கு முந்திய சாதன தரிசன விஷயமென்று நீர் சொல்வது சரியல்ல. ஏனென்றால் சாதனங்களைப் பின் சொல்ல வேண்டிய நிமித்தியம் ஸாத்தியத்தை முன் நிர்தேசிக்க வேண்டியது அகத்தியமாகையால் சிரவணாதிகளினாலே ஸாதிக்கத்தக்க பிர்மாத்மைக்கிய ஸம்மியக் தரிசன விஷயமாகவே சொல்ல வேண்டும். தரிசனம் பண்ண வேண்டுமானாலென்று ஒருசப்தங் கூட்டிக் கொண்டதினால சிரவணாதிகளிலும் அப்படியே கூட்டிக் கொள்ள இடம் நேரிடுமென்ற குற்றமும் வராது. எந்த ஸந்தர்ப்பத்தில் எந்தச் சப்தத்தைக் கூட்டிக்கொள்ளுகின்றது உசிதமாகுமோ அந்த ஸந்தர்ப்பத்தில் அந்தச் சப்தத்தைத்தான் கூட்டிக் கொள்ளப் பிரமாணமுண்டு. ஆகையினாலே ஸௌஷுப்த பிர்மவாதியால் வியாக்கியானஞ் செய்யப்பட்ட பிரகாரம் நியாயமாகவே யிருக்கின்றது.

உத்தரம்—ஸாத்தியத்தை முன் நிர்த்தேசிக்கின்றது மந்தாதிகாரி விஷயமாகையால் இந்த உத்தமாதிகாரி விஷயமான பிரகரணத்தில் நிர்த்தேசிக்க வேண்டியதில்லை. ஸாத்தியமான ஸம்யக்தரிசனம் தரிசனாதி நாலு சாதனத்தையுங் கிரமமாக ஸாதித்தவனுக்குத் தன்னால் உதயமாகிற படியினாலே அதை நிர்த்தேசிக்கவே கூடாது. இந்த ஸந்தர்பத்தில் ஆனாலென்ற ஒரு சப்தத்தைக் கூட்டிக் கொள்ளுகின்றதும் உசிதமல்ல. ஏனென்றால் சாதன தரிசனமாகவே மேல்வாக்கியங்கள் நாலும் துலங்குகின்றபடியால் மேல் வாக்கியங்கள் எப்படி யென்றால் சொல்லுகின்றோம். தரிசனத்தினாலே சிரவணத்தினாலே மனனத்தினாலே விஞ்ஞானத்தினாலே இந்தக் காரிய பிரபஞ்சமெல்லாம் அறியப்படுகின்றதென்று தரிசனாதி நாலுஸாதனங்களும் ஒரு விபக்தியினாலே சொல்லப்பட்டிருக்கிறதுகள். பின்னும் கண்ணுக்குக் கண்ணாகவும், காதுக்குக் காதாகவும், மதிக்கு மதியாகவும், விஞ்ஞானத்துக்கு விஞ்ஞானமாகவும் இருக்கிறதென்று ஒரே விபக்தியாக நாலு சப்தங்கள் அறியப்பட்டிருக்கின்றன. இப்படி வெகுபிரமாணங்களினாலே முந்திய தரிசனம் ஸாதனவிஷயமாகவே நிர்ண

யிக்கத் தக்கதாயிருப்பதால் ஸாத்திய தரிசன நிர்த்தேசமென்று சொல்லவே கூடாது. இப்படிப்பட்ட தரிசனாதி நாலு ஸாதனங்களையுங் கிரமமாக ஸாதியாதவனுக்கு ஸம்மியக் தரிசனம் ஒருக்காலும் உண்டாக மாட்டாது. எப்படி நித்யாநித்திய விவேகம் முதலான நாலு ஸாதனங்கள் கிரமமுக்திக்கு முக்கியமாகுமோ அப்படியே தரிசனாதி நாலும் ஜீவன்முக்திக்கு முக்கியமாகையால் ஜீவன்முக்தி இச்சையுள்ளவர்கள் இந்த ஸாதனங்களை அவசியம் அநுஷ்டிக்க வேண்டியது. பின்னும் இந்த நாலு ஸாதனங்களும் ஜாக்கிரத்ஜாக்கிரத், முதலான பதினாறு அவஸ்தைகளைப்போல் தரிசன தரிசனம் முதலாகிய பதினாறு அவஸ்தைகளாகும். இதின் விவரம் ஸப்தபூமிகளை அநுசரித்துப் பிரணவ விபாகத்தினால் முன்சொல்லியபடி ஊகிக்கத் தக்கது.

ஐந்தாவது
ஜீவன்முக்திஸாதனப்பிரகரணம்
முற்றிற்று.

விதேகமுக்திஸாதனப் பிரகரணம்

இனிவிதேகமுக்தி சாதனங்களை நிரூபிக்கின்றோம். ஸரஸ்வதீ ரகஸ்யோபநிஷத்தில் திரசியாநுவித்த மென்றும், சப்தாநுவித்தமென்றும், நிர்விகற்பமென்றும் மூன்றுவித ஸமாதிகளைச் சொல்லியபின் மூன்றுவித ஸ்தப்திபாவங்களையும் சொல்லிப் பின்பு இந்த ஆறுவித ஸமாதிகளையும் நித்தியம்பழகவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறுவித ஸமாதிகளில் திரசிய, சப்தாநுவித்தங்களென்ற இரண்டு ஸமாதிகள் மனன, நிதித்தியாசனங்களைக் காட்டிலும் வேறில்லை யென்று முன் சொல்லியாயிற்றே. மற்ற நாலு ஸமாதியின் பிரகாரமும் பேரும் இங்கே நிரூபிக்கவேண்டும். அதெப்படி யென்றால், நிர்விகற்ப ஸமாதியென்பது ஸ்வாநுபூதி ரஸாவேசத்தினால் திர்சிய பிரபஞ்சங்களையும், பிரம்ம இலட்சண சப்தங்களையும் உபேட்சித்து நிவாததீபம்போல் சஞ்சலமற்று நிற்பதேயாகும். முந்திய நிதித்தியாசன ஸாதனத்

ணதையும், அந்தச் சாதகனையும், விட்டு அந்த ஸாத்தியமான பிர்மாத்மைக்கியானுபவத்தில் பற்றி இருப்பதே நிர்விகற்ப ஸமாதியென்று அறியத்தக்கது. மற்ற மூன்று ஸமாதிகளுக்கும் பேர்கள் அந்த உபநிஷத்தில் சொல்லப்படா திருந்தபோதினும் மூன்றுவித ஸ்தப்தீபாவமென்று அதின் இலட்சணஞ் சொல்லப்பட்டிருப்பதால் யுக்தமானபடி பேரிடப்படுகின்றது. நிஸ்ஸங்கற்ப ஸமாதியென்றும், நிர்விர்த்திக ஸமாதியென்றும், நிர்வாஸன ஸமாதியென்றும், இதில் பிர்மத்துக்குப் பூதங்களெல்லாம் ஒரு பாதமென்றும், மூன்று பாதங்கள் அமூர்த்த ஸ்வரூபங்களாகச் சிதாகாசத்தில இருக்கிறதுகளென்றும், சொல்லிய வேதவாக்கியமும் பிரமாணமாகும். விகற்பத்தைவிட்டும் சங்கற்பத்தை விடாம லிருப்பதால் நிர்விகற்ப ஸமாதியானது ஸஸங்கற்ப ஸமாதியென்று சொல்லப்படும். ஸங்கற்பத்தைவிட்டும் விர்த்தியை விடாதிருப்பதால் நிஸ்ஸங்கற்ப ஸமாதியானது, ஸவிர்த்திக ஸமாதியென்று சொல்லப்படும். விர்த்தியைவிட்டும் வாஸனையை விடாம லிருப்பதால் நிர்விர்த்திக ஸமாதியானது ஸவாஸன ஸமாதியென்று சொல்லப்படும். ஸத்ரூபமான ஸப்பிரதியோகிகப் பிர்ம்மத்தைக்காட்டிலும் வேறுபடாத அந்த வாஸனைதானே தேற்றாங்கொட்டைபோல் நசித்துப்போகுமளவில் சேஷித்த நிஷ்பிரதியோகிக ஸத்தா ஸாமான்னிய பிர்ம்ம ஸ்வரூபமானது நிர்வாஸன ஸமாதியென்று சொல்லப்படும்.

சங்கை—இந்த ஸமாதிகளெல்லாம் யோக சாஸ்திரத்தை அநுசரித்திருப்பதால் அத்வைத ஞானசாஸ்திரத்தை விரோதிக்கிறதே? சாதனங்களை வெகுவாகப் பிரித்துச்சொன்னால் ஸாதகாளும் ஸாத்தியங்களும் அப்படியே வெகுவாகுமே! ஸாத்தியங்களான மோட்சங்கள் வெகு பிரகாரங்களானால் மோட்ச ஸ்வரூபங்களான பிர்ம்மங்களும் வெகுவாகுமே? இப்படிப் பிர்மங்கள் அநேகமென்று ஒரு சாஸ்திரத்திலும் கேள்வியாக வில்லையே! ஆகையினாலே இந்த ஸமாதி பேதங்களையம் ஜீவன்முக்தி விதேகமுக்தியாதி பேதங்களையும் அகாரோகாராதி நூற்றிருபத்தெட்டு மாத்திரை பேதங்களையும் பிரதிபாதிக்கிற நூற்றெட்டு உபநிஷத் சாஸ்திரத்தைப் பூர்வ

பட்சமாக நிரூபித்து அத்வைதஞ்ஞானத்தைப் பிரதிபாதிக்கி ற தசோபநிஷத் சாஸ்திரத்தை ஸித்தாந்தபட்சமாக நிரூபிக் கிறது நியாயமாக இருக்கிறது.

உத்தரம்—நூற்றெட்டாவதான முக்திகோபநிஷத்தில் ஸ்ரீ இராமசந்திரமூர்த்தி ஹநுமாருக்கு உபதேசம் பண்ணு வதில் மாண்டூக்கியோப நிஷத் ஸஹிதமான தசோபநிஷத்தி னாலே கிரமமுக்தி ஸாதனமான அத்வைதஞ்ஞானம் சித்திக் குமென்றும், முப்பத்திரண்டு உபநிஷத்தினால் ஜீவன் முக்தி சாதனமான விஞ்ஞானம் ஸித்திக்குமென்றும், நூற்றெட்டு உபநிஷத்தினால் விதேகமுக்திஸாதனமான நிர்விகற்பாதி ஸ மாதிநிஷ்டை ஸித்திக்குமென்றும், அறியப்படுகிற படியினா லே விதேக முக்தியை அடைந்த பிற்பாடு ஜீவன் முக்தியை யடைந்து பின்பு கிரமமுக்தியை அடையவேண்டு மென்பது சரியல்ல.ஆனதினாலேயும் தசோபநிஷத்துச் சாஸ்திரத்தைச் சித்தாந்தபட்சமாகச் சொல்வது எவ்வளவும் நியாயமாகா து. இந்தச் சாஸ்திரம் அத்வைத ஞானஸாஸ்திரத்தை விரோ திக்கவுமில்லை. அத்வைதஞ்ஞானம் வந்தபின் இந்த ஸமாதி யோகங்களைச் செய்யவேண்டி யிருப்பதினால் பூர்வகாலத்தில் அது உபயோகப்பட்டதுதான். ஞானத்துக்குப் பிராதான்னி யமும், யோகத்துக்கு அப்பிராதான்னியமும், ஸௌஷுப்த வாதியினாலே சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால் பிர்மாத்ம பேதயோகத்துக்கு அப்பிராதான்னியத்தில் அபிப்பிராயமே தவிர, அபேதயோகத்தில் தாத்பரியந்தா னென்று சொல்ல வும் இடமில்லை; ஏனென்றால் காலத்திரயத்திலும் பிர்மாத்ம பேதத்தை ஒப்பாமல் ஸாதகனுக்கு அபேதஞானம் வருகிற தற்கு முந்தியே வஸ்து அபின்னமாகவே யிருக்கிறதென்று வெகுவாய் நிரூபித்திருப்பதினால் நிதித்தியாசனத்துக்கு அப் பிராதான்னியத்தைச் சொல்லியிருப்பதினாலும் அபேத யோ கத்திலும் தாத்பரிய மில்லையென்று துலக்கமாக இருக்கிறது.

சங்கை—ஞானத்தின் பிரகாரம் எப்படி? யோகத்தின் பிரகாரம் எப்படி?

உத்தரம்—குருவால் உபதேசிக்கப்பட்ட வாக்கியார்த்தத்தைக் கேட்டு யுக்தியினாலே நிச்சயிப்பதே ஞானமாகும். அப்படி நிச்சயித்த ஆத்மாவை நிதித்தியாசனத்தினால் பிர்மத்தோடு ஒன்றாகச் சேர்ப்பிப்பதே யோகமாகும். இப்படிப்பட்ட யோகாப்பியாசம் பண்ணாமல் அத்வைத ஞானத்தைத்தானே. ஸௌஷுப்த பிர்மவாதியினுடைய உபதேசத்தினால் பலமாகப் பிடித்துக்கொண்டு எதேச்சையாகவே இந்தக் கலியுகத்துக்குச் சரியானபடி ஸஞ்சரிக்கின்ற ஜனங்கள் பிரபலமாயிருப்பதை யிட்டு லகலோபநிஷதர்த்தங்களையும் லோகரட்சணார்த்தமாக இப்படி விசிதம் பண்ணுகின்ற நம்மிடத்தில் யோகப்பிரதான வசனங்கள் விளங்குகின்றன என்று அறியத்தக்கது. பிர்மங்கள் அநேகமென்று யாதொன்று சொல்லப்பட்டதோ அது ஒருசாஸ்திரத்திலும் கேள்வியாக இல்லையென்றதைக் குறித்து முன்சொல்லியிருந்தபோதிலும் இன்னமுஞ் சொல்லுகின்றோம். இப்படிக் கேட்கின்ற உன்னாலேயே பிரமபேதம் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கின்றது. அதெப்படியென்றால் ஸகுணம், நிர்க்குணமென்று பிர்மம் இரண்டு. அதில்ஸகுணப் பிர்மம் விஷ்ணு, ருத்ராதி பேதமாக அநேகமென்று சொல்லப்படுகின்றது. ஆகையினாலே நாம் சொன்னதில் குற்றமில்லை. பரிவிராஜகோபநிஷத்தில் நாலுவித ஸ்வரூபானுஸந்தானத்தினால் தேகத் தியாகம் பண்ணத்தக்கதென்று நிர்க்குணப் பிர்மஸ்வரூபமே நாலுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும் அகாராதி பிரணவமாத்திரைகள் நிர்க்குணப் பிர்மஸ்வரூபங்களாகுமென்று முன்னே சொன்னோமே. மாண்டூக்கியோபநிஷத்திலும் பாதங்களே மாத்திறைகள். மாத்திரைகளே பாதங்களென்று இலட்சியங்களான பாதங்களுக்கும், இலட்சகைகளான மாத்திரைகளுக்கும், அபேதஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே பிராரப்தகதேக பாதம்வரையில் பிர்மத்தினிடத்தில் விஜாதீய, ஸஜாதிய பேதங்களில்லாதிருந்தபோதிலும் ஸ்வகதபேதம் நித்திய ஸித்தமாகவே இருக்கின்றதென்று முமுட்சுக்களினாலேயும், ஜீவன்முக்தர்களினாலேயும் எண்ணத்தக்கது. எப்படி கிரமமுக்தி கிடைக்கவேண்டிய நிமித்தம் நித்தி

யா நித்திய விவேகாதி ஸாதன சதுஷ்டயம் அவசியம் ஸம்பாதிக்க வேண்டுமோ, எப்படி ஜீவன் முக்தி கிடைக்க வேண்டிய நிமித்தம் தரிசநாதி ஸாதன சதுஷ்டயம் அவசியம் ஸம்பாதிக்க வேண்டுமோ அப்படியே விதேகமுக்தி கிடைக்க வேண்டிய நிமித்தம் நிர்விசற்பாதி ஸமாதி சதுஷ்டயம் அவசியம் ஸம்பாதிக்க வேண்டும்.

சங்கை—இந்த நிர்விகற்பாதி நாலுவித ஸமாதிபண்ணாமல் சப்தாநுவித்த ஸமாதியாகிற நிதித்தியாசனத்தினால் உண்டான ஸாட்சாத்காரத்தினால் பிரமவித்தாகவே மரித்தவருக்குப் பின் ஜன்ம முண்டோ?

உத்தரம்—ஜன்மமில்லா விட்டாலும் பிராரப்த சுகதுக்கங்களினாலே நிரம்பவும் ஸங்கடம் நேரிடும். ஆகையினாலே ஸகல துக்கமும் அற்று நித்திய நிரங்குச திருப்தியை அடைந்திருக்க வேண்டியநிமித்தம் சொல்லிய ஸமாதிகளைப் பண்ண வேண்டும். இப்படிப்பட்ட விதேகமுக்தியை யடைந்தவர்கள் அனந்தம் பேர்களிருந்தபோதிலும் உபநிஷத் பிரமாணத்துடன் ஒருவனைக் காண்பிக்கிறோம். அன்னபூர்ணோபநிஷத்தில் மாண்டவ்வியர் என்ற மஹாரிஷியானவர் கவுண்டன்னியரென்ற மஹாரிஷியினிடத்தில் தத்துவோபதேசம் பெற்று ஜீவன் முக்தராயிருந்தும் பிராரப்த திர்ஷ்டதுக்கம் பொறுக்க மாட்டாமல் மஹாமேருவின் தாழ்வு கரையில் பத்மாஸனத்தி லிருந்து திர்ட ஸமாதியினால் இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்த காலத்தில் ஸகலேந்திரியங்களும் தன் ஸ்வரூபத்துக் குள்ளே சமனத்தை யடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஜனக மகாராஜாமுதலான சிலர் விதேக முக்தாளென்று பிரசித்தமா யிருக்கின்றதே ஆகையினாலே தேகமிருக்கும் போதே விதேகமுக்தி சித்திக்கின்ற விஷயத்தில் எவ்வளவும் சந்தேகப்பட வேண்டியதில்லை. சிவதத்வ ஸுதாநிதி முதலான பிரமாண கிரந்தங்களும் இந்த விஷயத்தில் அநேக மிருக்கின்றன. ஸரூப மனோநாசம் ஜீவன் முக்தியென்றும், அரூபமனோ நாசம் விதேக முக்தியென்றும், நூற்றெட்டு உபநிஷத்தில் பிரசித்தமாயிருக்கின்றது. ஜீவன் முக்தி விதேக

முக்திகளுக்கு நூற்றெட்டு உபநிஷத்துக்கள் பிரமாணமென்று ஸ்ரீ இராமசந்திரமூர்த்தியினாலே ஹநுமாருக்குச்சொல்லப்பட்டும் இருக்கின்றது. ஆகையினாலே இந்த ஜீவன்முக்தி விதேக முக்திகளைக் கிரமமாக முன்சொல்லிய ஸாதனங்களினாலே அடையாமல் பந்தமோட்சாதீத நிஷ்பிரதியோகிகப் பிர்மத்தை மாத்திரம் வாக்கினால் புலம்புகின்ற ஸௌஷுப்த வாதியின்சிஷியாளாகிற பிராந்தாளுக்கு இந்த ஸம்ஸாரத்தில் நின்றும் எப்படி மோட்சம் கிடைக்கும். பின்னும் பரிவிராஜகோபநிஷத்தில் நாலுவித அதிவர்ணாசிரமிகள் சொல்லப்பட் டிருக்கிறார்கள். பிர்மவித்து, வரன், வரீயான், வரிஷ்டனென்றுவராகோப நிஷத்தில் சொல்லிய நாலுவித ஜீவன்முக்தாளாகிய அந்த அதிவர்ணாசிரமிகளுடைய நடைகளையும் சுருக்கமாக முந்திய பிரகரணத்தில் சொல்லி யிருக்கின்றோம். இவ்விடத்திலும் கொஞ்சம் சொல்லுகிறோம். உஞ்சவிருத்தியென்றும், மாதுகர விருத்தியென்றும், கோவிருத்தியென்றும், அஜகர விருத்தியென்றும் நாலுவித விருத்திகள் சாஸ்திரங்களில் பிரசித்தம். அவைகள் பிர்மவித்து முதலான நாலுபேர்களாலே கிரமமாக ஆசிரயிக்கத்தக்கவை. எப்படியென்றால் கிரகஸ்தனான பிர்மவித்து திரும்பிப்பாராமல் வீதியில்நில்லாமல் சஞ்சரித்ததினால் கிடைத்த தண்டுலத்தைத் தன் பத்தினிவசம் சேர்ப்பித்த பின்காலத்திலும், முன்காலத்திலும், சமாதிநிஷ்டராகவே யிருப்பார். ஸந்நியாஸியானவர் மத்தியான்னகாலத்தில் ஏழுகிரகம் புகுந்து வண்டுபோல் பிட்சையைக் கிரகித்து நதிக்கரையில் வைத்துப் போஜித்த பின்னும் முன்னும் சமாதி நிஷ்டராகவேயிருப்பார். முக்கியாதிவர்ணாசிரமியில் கௌணாதிவர்ணாசிர்மியான வரீயான் தன் பிரயத்தினம் அன்றி ஜனங்களாலே கொடுக்கப்பட்ட அன்னத்தைக் கோவைப்போல் வாயினாலே புஜித்த முன்னும் பின்னும் ஸமாதி நிஷ்டராகவேயிருப்பார். முக்கியத்தில் முக்கியனான வரிஷ்டன் ஆகாரங்களை ஜனங்கள் கொடுத்தபோதிலும் உள்ளிறங்காமல் பாம்புபோல் காற்றைக் குடித்துக்கொண்டு பாறை போலவும், பிரேதம் போலவும், பூமியில் விழுந்து கிடப்பான். வரீயானும்இப்

படியே விழுந்து கிடந்தபோதிலும் ஒவ்வொரு வேளையில் எழுந்திருந்து பாலோன்மத்த பிசாசாதிகளைப்போல் ஸஞ்சரிப்பதால் முக்கியத்தில் கௌணனென்று சொல்லப்படுகின்றான். இப்படி அதிவர்ணாசிரமிகளுடைய இலட்சணங்கள் பிரமாணங்களினாலே துலக்கமாய் அறியப்பட்டிருக்க ஸூதஸம்ஹிதையில் ஒரு அதிவர்ணாசிரமி ஒரு வேசியின் கிரகத்தில் பசியின் பீடையினாலே பிரவேசித்து அநேக பார்த்தாக்களைத் தனேச்சையினால் அதம் பண்ணின பாபபலமான ரோகபிசாசுகளினாலே பீடிக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்த வேசியினால் கொடுக்கப்பட்ட அன்னத்தைப் போஜித்தும் அந்த பிர்மவித்தினுடைய சிசுரூஷா மகிமையினாலே அப்போதே சகலபீடைகளும் நீங்கி மகாரூபவதியாகப் பவித்த அந்தவேசியினால் பிரார்த்திக்கப்பட்ட ஸம்யோகத்தையும் தேகபாதம் வரையிலுஞ் செய்ததாக ஒரு இதிஹாஸம் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியே ஸ்ரீகாளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ஒரு அதிவர்ணாசிரமி குலால ஸ்திரீயின் ஸம்யோகஞ் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸங்கதிகளை நன்றாகப் பரிசோதித்துப் பாராமல் சிலர் தங்களையும் அதிவர்ணாசிரமிகளாக எண்ணிக்கொண்டு அந்தத் துர்வியாபாரங்களைச் செய்கிறார்கள். இந்த விஷயத்துக்குச் சூதசங்கிதா வியாக்கியானத்தில் நாம் ஸமாதானம் சொல்லி இருக்கிறோம். ஆகிலும் இவ்விடத்தில் சுருக்கமாகச் சொல்லுகிறதென்னவென்றால் அந்த அதிவர்ணாசிரமியானவர் சூத்திர ஜாதியாவார். இன்ன ஜாதியென்று அவ்விடத்தில் நிர்ணயித்துச் சொல்லப்படாமலிருந்தபோதிலும் சூத்திரனென்றே நிர்ணயிக்கவேண்டி யிருக்கிறது. அப்படிக்கு இல்லாவிட்டால் நிரம்பவும் சாஸ்திரங்களுக்கு விரோதம் நேரிடும். பிராமணனுக்கு வேசியின் வீட்டில் பிட்சார்த்தமாகப் பிரவேசிக்கக் காரணமில்லையே? மனதுக்கு அருபநாசம் வந்தவராயுங் காணவில்லையே! யாதொருவருக்குப் பிராமணக் கிரகமென்றும் வேசியின் கிரகமென்றும் பேதஞானம் இருக்கமாட்டாதோ?

சங்கை—ஸரூப மனோநாசம்வந்த பிர்ம வித்துக்குப் பட்சியா பட்சிய விபாகசாஸ்திரம் விலகாமல் இருக்கவேண்டிய

நிமித்தம் சூத்திரனென்று நிர்ணயித்தால் பிர்ம வித்துக்கு ஸ்திரீபோக விரஸம் முதலான இலட்சண சாஸ்திரம் விலகாமல் இருக்கவேண்டிய நிமித்தம் அந்த அதிவர்ணாசிரமி அப்பிர்ம வித்தென்று சொல்லவேண்டி வருமே?

உத்தரம்—வரியானுக்கும், வரிஷ்டனுக்குந்தான் விஷய போகம் விரோதமே அன்றி வித்துக்கும், வரனுக்கும் விரோதப்படாது. அவர் ஸ்திரீ ஸம்யோகம் செய்ததினால் அப்பிர்மவித்தென்று சொல்லக்கூடாது. அப்படிப் பிராமண பிர்மவித்துக்களும் தாலி ஸம்யோகம் உள்ளவர்களாக இருப்பார்களென்று எண்ணத்தக்கதில்லை. தங்கள் வர்ணாசிரம தர்மங்கள் தவறாமல் இருக்கவேண்டிய நிமித்தம் சத்வகுணம் பொருந்தின சிஷ்டாசாரத்தில் நடையுள்ளவர்களாகையால் இந்த நம்முடைய அபிப்பிராயத்தை அநுசரித்து மற்றச் சங்கதிகளுக்கு ஊகிக்கத் தக்கதுகள். பின்னும் வித்துவான்களுடைய சிசுருஷா மகிமையைப் புகழவந்த பிரகரணமே தவிரப் பிர்ம வித்துக்களுக்கு எதேச்சாசாரத்தை விதிக்க வந்த பிரகரணமல்ல. உலகத்திலும், சந்திரன்போல் முகமென்ற திர்ஷ்டாந்தத்தில் ஏகதேசாம்சம் கிரகிக்கப் படுகிறதே தவிர ஸர்வாம்சமுங் கிரகிக்கப்படவில்லை. அவதூதோப நிஷத்திலும், அதிவர்ணாசிரமியின் இலட்சணத்தைச் சொல்லுகிற ஸ்தலத்தில் ஜலங்கள் ஸமுத்திரத்தைச்சேர்வதுபோலக் காமங்கள் யாதொருவருடைய ஸ்வரூபத்தில் லயிக்கிறதுகளோ அந்த அதிவர்ணாசிரமி காமங்களைக் காண்பிக்கமாட்டாரென்று சொல்லியிருப்பதால் எவ்வளவும் எதேச்சாசாரத்துக்கு இடமில்லை. மேலே சொல்லிய நாலுவித அதிவர்ணாசிரமங்களை நிர்விகற்பாதி ஸமாதிகளினாலே அடைந்து கிர்தகிர்த்தியாளான ஸத்புருஷாள் இந்த உலகத்தில் துர்லபாளாகையால் காகதாளிய நியாயம்போல் எப்போதாவது அப்படிப்பட்ட ம

ஹாபுருஷனைக்கண்டால் முமுட்சுகள் நிரம்பவும் பூஜிக்க வேண்டியது.

ஆறுவது விதேக முக்திஸாதன பிரகரணம்

முற்றிற்று.

இப்படிக்குச் சற்குரு சுந்தரேஸ்வர தாதபாத சிஷியராகிய அப்பைய திக்ஷிதாசாரியரால் செய்யப்பட்ட சுவாநுபூதி முற்றிற்று.